



அமரர்.

# அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

அவர்களின் நினைவான

# குல தீபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



இருமரபும் தூய தனிநாயக முதலி வழித்தோன்றலும் நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வதிவிடமாகவும் வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கரைச்சி பிரதேச செயலகம் ஆகியவற்றின் முன்னாள் பணிப்பாளருமான

அமரர்.

# அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

*அவர்களின் நினைவு சுமந்து வெளிவரும்*

# குலதீபம்

**17.09.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமர்ப்பணம்

எங்கள் குடும்ப விருட்சத்தின்
ஆணி வேர்
விழுதெறிந்து பெருகி நிற்கும்
பெருமரத்தை
உருகி வளர்த்தெடுத்த
உத்தமர்
தனக்கென வாழாத் தருமகுலம்
உம் திருவடியில் சமர்ப்பித்து
திருப்தி கொண்டோம்!

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலாற்றி வந்த பொருளெல்லாம் - தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு



மலர்வு
07.07.1958

உதிர்வு
18.08.2015

அமரர்.

# அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

அவர்களின்

## திதி வெண்பா

மன்மத வருட ஆவணித்திங்கள்
பூர்வபட்ச சதுர்த்தி திதியில்
புகழுடன் வாழ்ந்த தர்மகுலசிங்கம்
இப் பூவிலகு விட்டு மீண்டநாள் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இத்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புற்றியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருச்சிற்றம்பலம்

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சால
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினை சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனை தொடர்ந்து சிக் கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குண்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்த கனியே
அம்பலம் மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்ட னேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்கு சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னுகதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தனர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத அன்பு வேணடிபின்
வேண்டுகின்றார் பிறவாமை வேண்டும
மீண்டும் பிறப்புண்டேல்
உன்னையென்றும் மறவாமை வேண்டும்
இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்துபாடி அறவா நீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இடுக்கவென்றார்.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாங்கு வாழ்ந்த வழித்திடத்தின்
# நிஜவரிகள்

இந்து மா கடலின் எழில் முத்தாய் திகழ்கின்ற இலங்கையின் வடபுலத்தே பசுந்தீவு, பாற்தீவு என்றெல்லாம் புகழப்படும் நெடுந்தீவில் வாழ்ந்த இருமரபும் தூய தனிநாயக முதலி வழித் தோன்றலில் வந்த புகழ்பூத்த வைத்தியர் கார்த்திகேசுவின் மகனான அமரசிங்கமும் கிளிநொச்சி இராமநாதபுரத்தை சேர்ந்த ஐயம்பிள்ளையின் மகள் தெய்வானைப்பிள்ளை (பராசக்தி) யினதும் மூத்தமகனாக அவதரித்தவர் தான் திரு.தர்மகுலசிங்கம் அவர்கள் இவர் வரதலட்சுமி, தருமானந்தன், கேதீஸ்வரன், கமலவேணி ஆகிய நான்கு சகோதரர்களோடு மகிழ்ச்சியாக வாழ்ந்த காலப்பகுதியில் தனது ஆரம்ப கல்வியை நெடுந்தீவு சிறி சுப்பிரமணிய வித்தியா சாலையிலும் இடைநிலை மற்றும் உயர்கல்வியை நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும் கற்று வந்தார். வணிக பிரிவில் தமது உயர்கல்வியை கற்றுக் கொண்டிருந்த போது 1917ல் பதினேழாவது வயதில் தனது தந்தையாரை இழந்தார். குடும்பத்தின் முழச் சுமையையும் தாங்கும் பொறுப்பு இவரிடம் நிற்பந்திக்கப்ட்டது. அத்தோடு தனது கல்வியை விடுத்து இலங்கை நில அளவை திணைக்களத்தில் சாதாரண பணியாளராக இணைந்து கொண்டு அரச சேவையாளராகி தனது குடும்பத்தை பராமரித்தார். இத்தொழிலின் மீதான வருமானம் தனது குடும்ப தேவையை பூர்த்தி செய்யாது என கருதிய இவர் 1983ல் சவூதி அரேபியா சென்று நிலவளவை பணியாளராகி பணி செய்து தனது குடும்ப மாற்றத்தை துரிதப்படுத்தினார். தனது சகோதரர்களின் மீது எவ்வித பழுவும் ஏற்படுத்திவிடக் கூடாது என்ற பெருவிருப்போடு அவர் அங்கேயே தங்கி செல்வம் சேர்த்தார். அதன் காரணமாக தனது முதல் தங்கையினை திருவையாற்றை சேர்ந்த திரு. நந்தகுமாரனுக்கு கரம் சேர்த்து நிறைவடைந்தார். இளைய சகோதரன் திரு. தர்மானந்தனை சவுதிக்கும் பின்னர் கனடாவுக்கு சென்று சேர்வதற்கு கனடா வாழ் கலாதேவியை கரம் பற்றுவதற்கும் கால் கோள் இட்டார். அடுத்த சகோதரன் திரு.கேதீஸ்வரனை ஒரு பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதாரியாக கற்க வைத்ததுடன் அவர் ஒரு முதுமானி பட்டதாரியாகவும் இலங்கை திட்டமிடல் சேவை அதிகாரியாகவும் வருவதற்கும் முகாமை உதவியாளர் பத்மராணியை கரம்பற்றுவதற்கும் அடிப்படை ஊக்கியாக செயல்பட்டார். அதேபோல் அவரது இளைய சகோதரி கமலவேணி ஒரு விவசாய விஞ்ஞான மானி பட்டத்தையும் கல்வி முதுமானிப்பட்டத்தையும் பெற்று பிரதி அதிபராக பணியாற்றும் நிலமைக்கும் வர்த்தகர் தர்மகுலசூரியரை கரம்பற்றவும் காரணகர்தாவாக இருந்தார். தனது இளவயது முதல் இக்குடும்பம் சுபீட்சம் பெற தன்னை உருக்கிய இவருக்கு வாழ்க்கை துணையை சேர்த்து மகிழ்ச்சியினை வழங்க பெரியோர்கள் எடுத்த முயற்சியினால் 1993ல் அல்வாயை சேர்ந்தவர்களும் முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கனேசராசா சிறிபாரத தேவி தம்பதிகளின் புத்திரியாகிய சத்தியானந்ததேவியை 1993 கரம் பற்றிய தன் மூலம் சரீரதேவி, சரசானந்ததேவி,விஜயகுமாரன், காலம் சென்ற விஷ்னு குமாரன், சிறிஸ்கந்தகுமாரன், சாந்தினிதேவி, சிவஞானதேவி ஆகியோரை மைத்துனராக பெற்று கூட்டு குடும்பமாய் குதூகலித்து வாழ்ந்தார். எல்லா பொறுப்பையும் சுமக்கும் மைத்துனர்களால் இவர் செல்லப்பிள்ளையாய் சிட்டாய் வளர்ந்தார். வெளிநாட்டு வாழ்க்கையை விடுத்து கிளிநொச்சி மண்ணுக்கு திரும்பி பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் புள்ளிவிபர அலுவலராயும் பின்னர் விவசாய பிரிவின் வாழ்வாதார அலுவராகவும் பணியாற்றினார்.

கூடிகுதூகலித்த வாழ்க்கையின் அடையாளமாய் லதீசன் தினோசன், கிருதுஜா ஆகிய மூன்று மழலைகளினை பெற்று குதூகலித்தார். வன்னி இடப்பெயர்வில் முள்ளிவாய்க்கால்வரை சென்று மீளவும் திரும்பிய போது கரைச்சி பிரதேச செயலகத்தின் புனர்வாழ்வு உதவியாளராக இணைந்து மீள்குடியேற்ற கடமைகளை மேற்கொண்டார். அரச விருந்தினர் விடுதி காப்பாளராக பணிபுரிந்தார். வயது நிலை காரணமாக நிரந்தர பணியாளராக முடியாது விட்டாலும் தொழில் சூழலில் எல்லோருக்கும் நண்பனாய் உதவி செய்யும் பண்பாளனாய் வாழ்ந்த இவருக்கு காலன் அழைக்கும் காலம் சடுதியாய் வரும் என்று யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கவில்லை 18.08.2015 வவுனியா வைத்தியசாலையில் அவரது உயிர்பிரிந்தபோது எல்லாப்பிள்ளைகளும் சகோதரர்களும் மைத்துனர்களும், அருகிலிருந்து பார்த்து பராமரித்து விடைகொடுக்க கிடைத்த மரணம் அவருக்கு கிடைத்தது. அவரின் இழப்பால் இக்குடும்பத்துக்கு ஏற்பட்ட வெற்றிடம் ஈடு செய்ய முடியாததாயினும் பிறந்தோர் ஒரு நாள் இறப்பவர் என்ற பேருண்மையுடன் அமைதியடைவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் புலம்பல்

பத்து மாசம் சுமந்து பெற்ற வயிறு
பற்றி எரிகிறதே பாசமகனே
சுற்றம், அயல் ஊர் உலக மெல்லாம்
நித்தம் உன் பிரிவை எண்ணிக் கண்ணீர் வடிக்குதே

ஊக்கமும், உழைப்பும் உயிர் மேல்
நீக்கமற நிறைந்திட்ட அன்பும், பாசமும்
உள்ளழகும், வெளியழகும் ஒருங்கமைந்த
உத்தமனே உடலை விட்டே ஓடி மறைந்தாயோ

கணந்தோறும் கணந்தோறும் நீ
என் மனத்திரையிலே மறையாத நினைவாய்
உயிர் வாழ்ந்த காலக் காட்சிகள் வந்து வந்து
உள்ளமெல்லாம் நிறைந்து வழிகிறதே.

ஓடோடி வருவாயா மகனே நான்
ஓடாய் தேய்ந்து மாடாய் மடிகிறேன்
காடோடு கடற்புறமோ ககனப்பெரு வெளியோ
காற்றாகி விட்ட உன்னைக் காண்பதெப்போ மகனே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குலம் அண்ணன்

இளமையில் சுமையுடன்
வறுமையை கடந்து
இருப்பை நிலைநிறுத்திய - தலைமகன்
இன்னமும் இன்னமும்
இன்பமாய் வாழ
தன்னையே உருக்கிய - முதல் மகன்
நல்லன மட்டுமே
வல்லன வாக
மெல்லென சுழன்ற - மாருதன்
அல்லன நீக்கி
அனைத்திலும் நேர்மையாய்
அடிபதித்திருந்த அற்புதன்
சட்டெனச் சிரிப்பும் - சடுதியாய் பகிடியும்
விட்டெறிந்தியங்கிய - விற்பனன்
மொட்டெனத் தலையும்
முகத்தினில் பருவும்
முழு நிலவாகிய - குலம் அண்ணன்
இப்புவி மீதினில் - இருந்திட்ட வரையிலும்
இயலுமை - நிறைவாய்
இருப்புருவான - எந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் எங்கே காண்பேன்

என் ஆருயிர்த் தெய்வமே
காலமெல்லாம் என்னை கண்கலங்க வைத்து விட்டு
நீ மட்டும் இறைவனிடம் சென்றுவிட்டதேனோ?
சென்ற இடமெல்லாம் நாம் ஜோடியாக சென்று வந்தோம்
ஆனால் இன்று என்னை விட்டு பிரிய
எப்படி மனம் வந்ததையா?
இது விதியா இல்லை சதியா? என நான் அறியேன்
நோயை மாற்ற என்று ஊருராய்
நாம் கொண்டு சென்றதேனோ
என் கனவெல்லாம் உன் உருவமாய் நிக்குதையா?
சித்தம் நிறைந்து வாழாமல் சிதைந்து போன மாயமென்ன
நோய் வந்து வாடிய போதும்
நொந்து ஒரு சொல் சொல்லவில்லையே
உன்னை கணவனாய்க் கொண்ட நாள்
முதலாய் குறையேதும் கணடதில்லை
கரம் பிடித்த நாள் முதலாய் மனம்
நிறைவாய் வாழ்ந்து வந்தோம்
பிஞ்சுக் குழந்தைகள் மூன்றைத் பரிதவிக்க விட்டு
நீள்தூரம் சென்றனையோ?
மறக்க முடியாமல் மனது பதறுதையா?
மீண்டுமொரு பிறப்பெடுத்து வாராயோ

**- மனைவி -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பல்

அப்பா என்றழைக்க இனி எமக்கு யாருமில்லையப்பா,
அப்பா என்று நாங்களழைத்தால் உன்
உச்சி குளிருமப்பா, கட்டிலிலும் தொட்டிலிலும்
கால்மேலும் தோள்மேலும்
கட்டி அணைப்பியே அப்பா
நீ இல்லாத வாழ்வே எங்களுக்கு இருள்தானப்பா
இனி எப்போதப்பா தம்பி, பிள்ளை என்று கூப்பிடுவாய்?
இனி ஒருபோதும் உன்முகத்தைப் பார்க்க முடியாதப்பா
ஒரு முறையாவது உன் முகத்தையும் என் குரலையும்
கேட்காது தவியாய் தவிக்கின்றோம் அப்பா
நீ வருவாயென உன் வரவுக்காக காத்திருக்கிறோமப்பா?

## மருமக்கள் புலம்பல்

எங்கள் மாமாவே! மக்கள்தான் நீங்கள்
மருமக்கள் இல்லை என்றீர்
உங்கள் பிள்ளைகள் போல் உயர்வாக நேசித்தீர்
மருமக்கள் தாங்கள் இங்கு மனமிழந்து கலங்குகின்றோம்
தங்கள் திருமுகத்தை, பார்ப்பதற்கு தவிக்கின்றோம்
கொஞ்சமிரங்கியவன் மீண்டும் உமை கொண்டு வரமாட்டானோ
நெஞ்சம் பதற நெக்குருகி நிற்கின்றோம்
உங்கள் உயர்ந்த பாசத்தில் நாமிருக்கையில்
நீங்கள் புறப்பட்ட மாயமென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள் புலம்பல்

எங்கள் ஆசைச் சகோதரனே!
பல்லாண்டு காலம் பாசமாய் இருந்தோம்
எத்தனை வருடங்கள் எங்களோடு
இணையாய் இருந்து இனிய கதை பேசுவாயே!
வாழும் காலம் இன்னும் அதிகமென்று
உன்னைப்பார்த்து பேசவென்று
கற்பனைகள் கொண்டிருந்தோம்
பார்த்து பேச முடியாது போனாய்
நினைத்தாலும் எம் நெஞ்சம் ஆறவில்லை
அழுது அழுது புரள்கின்றோம்
இனி எப்போது உன்னை நாங்கள் காண்போம்
என்று ஆறாத்துயரில் மாளாது துடிக்கின்றோம்

## மைத்துனர்மார் புலம்பல்

எங்கள் எல்லோரையும்
அகன்று விட்டதேனோ
அன்புடன் எமை வரவேற்று
அறிவுரைகள் பல உரைத்து
இன்பமுடன் இனிய கதைபேசி
இதயந்தனைக் கவர்ந்தீரே!
உளமுருகித் துடிக்கின்றோம்
எமைவிட்டு எங்கு சென்றீர்
துன்பத்தில் நனைய விட்டு
துயர் தினமும் தந்து விட்டீர்
இப்புவியில் உமை இனிமேல்
காண்பது தான் எப்போதோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கிளிநொச்சி மாவட்ட குடியேற்றத் திட்டங்களின் வரலாறும் வாழ்வியலும்"

அமரசிங்கம் கேதீஸ்வரன்,
B.A. (Hons) M.phil (ELN)
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.


கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்ப் பாசனப் பொருளாதாரம் பற்றிய இவ் ஆய்வானது முதல்நிலை ஆய்வுத் தரவு களாக என்னால் திரட்டப்பட்ட எனது முதுகல்விமாணிப் பட்ட ஆய்வுத் தரவுகளை நேரடி மூலமாக வும் இரண்டாம் நிலைத்தகவல் ஆய்வுகளாக இப்பிரதேசம் சார்ந்து பல்வேறு கல்வி ஆய்வாளர்களா லும் நூலாசிரியர்களதும் படைப்புக் களிலிருந்து பெறப்பட்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப் பாண மாவட்டத்தின் நிர்வாகப் பிரிவில் ஒன்றாகவும் தொகுதி அடிப் படையில் கிளிநொச்சி தேர்தல் தொகுதியாகவும் விளங்கிய கிளி நொச்சிப் பிரதேசமானது 198[illegible]ஆம் ஆண்டில் தனி நிர்வாக மாவட்ட மாகப் பிரகடனம் செய்யப்படத் தொடங்கிய முயற்சியானது அந்த சட்டபூர்வத் தன்மையை இலங்கைக் குடியரசு யாப்பின் ஏழாவது திருத்தத் தின் பிரகாரம் 1983ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கமைய 1984 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தி லிருந்து இலங்கையின் 25வது நிர்வாக மாவட்டமாகச் செயற்படத் தொடங் கியது. 1237.11 சதுர கிலோமீற்றர் மழை பரப்பளவைக் கொண்ட இம் மாவட்டமானது விவசாய சூழல் தொகுதி அடிப்படையில் தாழ்நில உலர் வலயத்தைச் சார்ந்ததாகவும் வருடாந்தம் சராசரி யாக 1300-1500 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியைக் கொண்ட ஒரு பகுதியாகவும் ஒன்பது பாரிய நீர்ப்பாசனக் குளங்களையும் பதினாறு நடுத்தர நீர்ப்பாசனக் குளங் களையும் 309 சிறிய நீர்ப்பாசனக் குளங்களையும் கொண் டுள்ளதுடன் 27%c – 30%c வரையிலான மாதாந்த சரா சரி வெப்பநிலையையும் நாள் ஒன்றுக்கு 2.5-6 மில்லிமீற்றர் வரை நீர் ஆவி யாகும் பகுதியாகவும் காணப்படுகிறது.

வடக்கு மாகாணத்தின் மொத்த நிரப்பரப்பில் 18 வீதத்தினைக் கொண்ட இம்மாவட்டத்தில் மொத்த நிலப் பரப்பில் 50 சதவீதமான காணிகள் அபிவிருத்திக்கு உள்ளாகியதுடன் அதில் 10 சதவீதத்திற்கு சற்று மேம் பட்ட நிலப்பரப்பானது நெற்செய்கைக் காகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலத்தில் 75 வீதமான மழைநீரைப் பெறும் பிரதேசமாக இது இருப்பதனால் 52-60 சதவீத ஆண்டு சராசரி மழை வீழ்ச்சியைக் கொண்டதுடன் செப்ரெம்பர் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையிலான நான்கு மாதம் பெறும் நீரைக் கொண்டு ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய கண்டிவீதி



1948 [illegible] 100 [illegible]

[illegible] ...nathamby
... OF THE PEACE
... /BE/JA/P/378



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதும் பயன்பெறவேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது. (எஸ்.சுப்ரமணியம் - 1998,07) நிர்வாக ரீதியில் 4 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் 95 கிராம அலுவலர் பிரிவுகளையும் 394 கிராமங்களையும் கொண்டிருப்பதுடன் 8 விவசாயப் பெரும்பாகப் பிரிவுகளையும் 17 விரிவாக்கல் சேவைப் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளதுடன் 3 பிரதேசசபைகளையும் 34 பிரதேசசபை உறுப்பினர்களையும் கொண்டிருப்பதுடன் 64000 வாக்காளர்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

மாகாணசபைக்கென 4 பிரதிநிதிகளையும் பாராளுமன்றத்துக்கென இரு உறுப்பினர்களையும் நிர்ணயம் செய்யும் இம்மாவட்டமானது குடியேற்றங்களால் செழிப்படைந்த ஒரு வடக்கு மாவட்டம் என்பதுவே பொருத்தமானதாகும். கிளிநொச்சி என இன்று சுட்டப்படும் பகுதிகளில் தொன்மை வரலாற்றுக் குறிப்புக்களும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. 1895ல் Lewis என்பவரால் எழுதப்பட்ட Manual of Vanni District என்ற நூலானது 19ஆம் நூற்றாண்டின் வன்னிப் பிரதேசத்தின் பௌதிக, பொருளாதார, பண்பாட்டு நிலைமைகளைச் சுட்டிநிற்கிறது. வரலாற்று ரீதியாக வன்னி இராட்சியத்தின் ஆளுகைக்குட்பட்டு இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னரான மக்கள் வாழ்க்கைக் குறிப்புகள் காணப்படுகின்றன. பூநகரி பிராந்தியத்திலிருந்து இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட பிராமிச் சாசனங்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவை ஈழம் பற்றிய இலங்கையில் கிடைத்த முதலாவது சான்றாகும். இப்பிராந்தியத்தில் இப்பெயர் தொடர்ந்தும் ஒரு கிராமத்துக்குரிய பெயராக இருந்துவந்ததை போர்த்துக்கேய ஆவணங்களிலிருந்தும் அறியமுடிகிறது. (ப.புஸ்பரட்ணம் - 1991,05) இதனைவிடக் குஞ்சுப்பரந்தன் பகுதியிலிருந்து பெறப்பட்ட முதுமக்கள் தாழி உருத்திரபுரம் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட ஆவுடையார் போன்றவற்றுக்கூடாக இந்த வரலாற்றுத் தொன்மை சோழர் காலப் பண்பாட்டுத் தொடர்ச்சியே (க.குணராசா – 1988,07) என நிறுவப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பூநகரி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களில் உள்ள புராதன கிராமங்கள் வரலாற்று ரீதியாக தொன்மை வாழ் விடங்களாக இருந்து வந்ததனைச் சுட்டுகின்ற போதிலும் குடியேற்றத்திட்ட முறைமைக்கூடாக அபிவிருத்தி அடைந்த ஒரு மாவட்டமாகவே இதனை அடையாளம் காட்டிக்கொள்ளமுடியும். இலங்கையில் செயற்படுத்தப்பட்ட வெவ்வேறு குடியேற்ற மாதிரிகளைக் கொண்ட 103 கிராமங்கள் இப்பிரதேசத்தில் அமுல் செய்யப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக இம்மாவட்டத்தில் காணப்படும் 95 கிராம அலுவலர் பிரிவுகளில் 60 கிராம அலுவலர் பிரிவுகள் குடியேற்றக் கிராமங்களை உள்ளடக்கியது என்பது இதனை நிறுவிநிற்கின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் நில அபிவிருத்தியிலும் விவசாய பொருளாதாரத்திலும் இந்த குடியேற்ற அமைப்பு முறை பாரிய தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. 58 கிராம விஸ்தரிப்புத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்கள். 21 மத்திய வகுப்பினர் குடியேற்றத்திட்டங்கள், 9 படித்த வாலிபர் குடியேற்றத்திட்டங்கள் 15 குடியான் குடியேற்றத்திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 37,746 ஏக்கர் நிலம் குடியேற்றத்திட்ட மாதிரி களுக்கூடாக அபிவிருத்திக்குட்படுத் தப்பட்டிருக்கின்றன. (காணிக்கிளை ஏடுகள், கச்சேரி, கிளிநொச்சி) இக்குடி யேற்ற முறையானது நிலப் பயபாட்டின்மீது பாரிய செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 59.4 சதவீத மான நிலப்பரப்பு மனித பாவனைக் குட்பட்டுள்ளதுடன் இப்பாவனை நிலத்தில் 58.8சதவீத மான நிலங்கள் பயிர்ச்செய்கைக்கான நிலங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பயிர்ச் செய்கை நிலங்களின் பயன்பாட்டில் நெற்செய்கை என்பதே முதன்மை பெற்றுள்ளது. 22,163 ஹெக்டயர் நிலப்பரப்பில் நெற்செய்கை இடம் பெறுவதுடன் 13,168 ஹெக்டயர் நிலங்கள் பாரிய நீர்ப்பாசனத் திட்டங் களின் கீழ் நீர்வசதி பெறுவதுடன் 604 ஹெக்டயர் நிலப்பரப்பு சிறிய நீர்ப் பாசனத்தின் கீழும் நீர்வசதி பெறுவ துடன் எஞ்சிய 8391 ஹெக்டயர் நிலப்பரப்பு மானாவாரியாக பயிர் செய்யப்பட்டு வருகிறது. (அ.கேதீஸ் வரன் - 2001,41) குடியேற்றப் பிரதேசத் தின் நீர்வளத்தை உறுதி செய்வதில் இயற்கையாகக் காணப்பட்ட 12 நீர்மூலங்களான ஆறுகளை மறித்து அமைக்கப்பட்ட 3 பாரிய குளங்களும் 6 நடுத்தரக்குளங்களும் காணப்படுவ துடன் 256 சிறிய நீர்ப்பாசனக்குளங் களும் செயற்பட்டு வருகின்றன. 80 மைல் நீளமான கடற்கரையோரத் தைக் கொண்டுள்ள இம்மாவட்டத் தில் 4000 வரையான குடும்பங்கள் இரண்டாவது வாழ்வாதாரத் தொழி லான மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன. 30 வரையான மீன் பிடிக்கிராமங்களைக் கொண்டிருக்கும் இம்மாவட்டத்தில் மீன்பிடி, மிகக்குறைந்த ஒரு தொகை யினருக்கு மட்டுமே துணைபுரிந்து வருவது நீர்ப்பாசனப் பொருளா தாரமே இம்மாவட்டத்தின் வலுவான மூலா தாரமாக இருப்பது நிறுவப்படு கிறது.

உலர் வலயத்தைச்சார்ந்த பருவ கால மழைபெறும் பிரதேசமான இம்மாவட்டம் ஆண்டுச்சராசரி மழை வீழ்ச்சியாக 52-60 அங்குலம் பெறுவ துடன், வடகீழ்பருவப் பெயர்ச்சிக் காலமான அக்டோபர் முதல் ஜனவரி வரையிலான காலப்பகுதியில் பெறும் மழைநீரினைச் சேமித்து வைப்பத னூடாக மட்டுமே சாத்தியம் என்பத னால் நீர்ப்பாசனக் குளங்களின் செயற் பாடு அடிப்படையில் ஒரு சமூக நிர்ணயக்காரணியாக (Social Detamination Factor) இருந்து வருவது கவனிக் கத்தக்கது. இந்தவகையில் இயற்கை யாக நீரை எடுத்து வரும் 7 பிரதான ஆறுகள் அவற்றை மறித்துக் கட்டிய தன் மூலம் அமைக்கப்பட்ட 8 பாரிய நடுத்தர நீர்ப்பாசனக் குளங்களும் இந்தக்குளங்களை அடியொற்றி குடி யேற்றத்திற்கெனக் கொண்டுவரப் பட்ட குடியான்களின் வரவும் இம்மா வட்டத்தின் புதிய வரலாற்றின் தொடக்கமாக அமைந்தது. இவ்வகை யில் கீழ்வரும் அட்டவணை இம்மாவட் டத்தில் காணப்படும் ஆறுகளின் விபரத்தினைக் காட்டுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | ஆறுகளின் பெயர் | ஆற்றுவழி பிரதேசம் சதுரமைல் | நீர் கிடைப்பளவு 1000 ஏக்/அடி | | |
|---|---|---|---|---|---|
| | | | காலபோகம் | சிறுபோகம் | வருட மொத்தம் |
| 01 | பிரமந்தனாறு | 32 | 40 | 1 | 41 |
| 02 | நெத்தலியாறு | 47 | 50 | 1 | 51 |
| 03 | கனகராயன் ஆறு | 350 | 325 | 12 | 337 |
| 04 | கலவலப்பு ஆறு | 22 | 34 | 0 | 34 |
| 05 | அக்கராயன் ஆறு | 75 | 106 | 1 | 107 |
| 06 | மண்டைகல்லாறு | 116 | 120 | 1 | 121 |
| 07 | பல்லவராயன்கட்டு ஆறு | 62 | 51 | 1 | 52 |

**அக்கராயன் ஆற்றுப்படுக்கையும் இரணைமடுக்குளமும்**

கிளிநொச்சியின் நீர்வளத்தின் மையமாகவும் வடபிரதேசத்திலுள்ள மிகப்பெரியகுளமாகவும் காணப்படும் இரணைமடுக் குளமானது நீர்ப்பாசனத் திணைக்களத்தால் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது குளமாகும். இது நிர்மாணிக்கக் காரணமாக இருந்த ஆற்றுப்படுக்கையாக கனகராயன் ஆறு காணப்படுகிறது. இயற்கையான நீரேந்துப் பரப்பைக் கொண்ட ஒரே ஆற்றுமறிப்புக்குளமாக இது காணப்படுகிறது. வடபகுதியில் மிக நீளமான அதாவது 36 மைல் நீளம் கொண்ட இவ்வாறானது 350 சதுரமைல் பரப்பை நீரேந்துப் பிரதேசமாகக் கொண்டதுடன் 3,37,000 ஏக்கர் அடி நீளமான நீர் பெறுவனவாகக் கொண்ட இக்குளத்தின் நிர்மாண வேலைகள் 1902ஆம் ஆண்டில் ஆரம்பித்ததாகும். ஆனையிறவு நீரேரியில் வீணே கொட்டப்பட்டுக் கொண்டிருந்த நீரைத்தடுத்து அணை ஒன்றின் மூலம் நீரைத்தேக்கி வைப்பதன் ஊடாக விவசாயத்திற்கான நீரைப் பெறமுடியும் என்ற கருத்தை அப்போது யாழ் மாவட்டத்தின் அரச அதிபராக இருந்த சேர்.வில்லியம் துவைனம் என்பவர் அக்கால அரசுக்கு சிபார்சு செய்திருந்தார். (க.குணராசா - 1902,52) இந்த வேண்டுகோளை ஏற்று 1902இல் குளவேலைகள் ஆரம்பித்திருந்தன. இவ்வேலைகளைத் தொடங்க அப்போது போதிய தொழிலாளர்கள் இப்பிரதேசத்தில் காணப்படாமை காரணமாகவும் அடர்ந்த காடுகளின் நடுவில் தங்கி வேலை செய்வதற்கு சுதேசிகள் தயாராக இருக்காமையினாலும் அப்போது மலிவான ஊழியத்தைப்பெற பாவிக்கப்பட்ட இந்திய கூலிகளின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டின் திண்டுக்கல் பகுதியிலிருந்து தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டு பயன்படுத்தப்பட்டனர். இந்தியாவில் குளங்கட்டுவதில் தேர்ச்சியும் குளம் கட்டிகள் என அழைக்கப்பட்டோர் இதற்கென இங்கு கொண்டு வரப்பட்டனர். இக்காலத்தில் 4ஆம் வாய்க்கால் பகுதியில் இவர்களுக்குப் பயிர்செய்ய நிலங்களும் வழங்கப்பட்டிருக்கிறது. 1902ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது குளநிர்மாண வேலைகள் 1920ஆம் ஆண்டில் நிறைவுபெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது குளம் 22 அடி உயரத்தையும் கொள்ளளவாகப்பெறும் நிலைக்கு 40,000 ஏக்கரடி நீர்மட்டத்துக்கு உயர்த்தப்பட்டதுடன் கடல்மட்டத்தி லிருந்து 89 அடி உயரத்திலுள்ள இக்குளம் நிர்மாணிப்பு செய்யப் பட்டது. குடியேற்ற முறைமைபோல் அல்லாது குளநிர்மாணிப்புக்காக வந்து நிலம் பெற்றுக்கொண்ட 4ஆம் வாய்க்கால் பகுதி தொழிலாளர்களே முதன் முதலில் இம்மாவட்டத்தினுள் உள்நுழைந்த குடியேற்றவாசிகள். ஆயினும் தெளிவான பதிவேடுகள் இன்மை காரணமாக இது கவனத்தில் கொள்ள முடியாத நிலையில் வரண்ட வலய குடியேற்றத்திட்ட முறைமை யின் கீழ் 1936ஆம் ஆண்டு கணேச புரத்தில் ஆரம்பிக்கப்பட்ட குடியான் கள் குடியேற்றத் திட்டத்தின்மூலம் முதலாவது நீர்ப்பாசன விவசாய செய்கைமுறை இப்பிரதேசத்தில் இடம் பெறத்தொடங்கியது. (அ.கணபதிப் பிள்ளை - 1979,37) 5 ஏக்கர் வயல் நிலங்களும் 2 ஏக்கர் உயர்நிலங்களும் கொண்ட 756 ஏக்கர் நிலங்கள் 108பேருக்கு வழங்கப்பட்டது. இக்குடி யேற்றத்திற்கு வந்தவர்கள் 1வது குடியேற்ற கிராம வாசிகள் என்ற பெயரைப்பெற்றுக் கொண்டனர். இரணைமடுவில் இடதுகரை வாய்க் கால் மூலம் நீர் பெற்றுவரும் இக்கிரா மம் நகர் மையத் திற்கு அண்மியதாகக் காணப்படுகின்றபோதும், போதிய உட்கட்டமைப்பு வளர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாத ஒரு விவசாயக் கிராமமாகவே இருந்து வருகிறது. 11 மைல் நீளமான இரணைமடுவில் இடது கரைவாய்க் காலை அடிப் படையாகக் கொண்டு 1950 ஆம் ஆண்டில் 4 ஏக்கர் தாழ் நிலமும் 3 ஏக்கர் உயர் நிலமும் கொண்ட 1,344 ஏக்கர் கள் 192 குடியான்களுக்கு வழங்கப் பட்டு குடியேற்றப்பட்ட உருத்திர புரம் 10ஆம் வாய்க்கால் கிராமமா னது 2வது குடியேற்றமாக இம்மாவட் டத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. 1951ஆம் ஆண்டு இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டை உயர்த் தும் வேலைகள் தொடங்கப்பட்டு குளக்கட்டின் உயரம் 28 அடியாக மாற்றப்பட்டதுடன் இடது கரை வாய்க்காலை ஆதாரமாகக் கொண்டு உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் கிராமம் 4ஏக்கர் வயல் நிலமும் 3 ஏக்கர் உயர் நிலமும் கொண்ட 756 ஏக்கர் நிலங்கள் 108 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. 1953ஆம் ஆண்டில் இரணை மடுவின் வலதுகரை வாய்க் கால் நிர்மாணம் செய்யப்பட்டது. 7 மைல் நீளமான இவ்வாய்க்காலை அடிப்படையாகக் கொண்டு வட்டக் கச்சி கொலனி கிராமம் 3 ஏக்கர் வயல் நிலங்களும் 2 ஏக்கர் உயர்நிலங்களும் கொண்ட 2,070 ஏக்கர் நிலங்கள் 394 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. படித்த வாலிபர் குடியேற்றத்திட்டம் என்ற அடிப்படையில் 1954ஆம் ஆண்டு வட்டக்கச்சி சிவிக்சென்ரர் பகுதியில் 3 ஏக்கர் வயல்நிலமும் 2 ஏக்கர் உயர் நிலமும் கொண்ட 89 பேருக்கு 267 வயலும் 2 ஏக்கர் மேட்டு நிலமும் வழங்கப்பட்டது. இடது கரை வாய்க் காலைப்பயன்படுத்தும் மற்றுமொரு குடியான்கள் குடியேற் றம் முரசு மோட்டையில் வழங்கப் பட்டது. 3 ஏக்கர் வயல்நிலமும் 1 ஏக்கர் உயர் நிலங்களும் கொண்ட 1228 ஏக்கர் நிலங்கள் 307 குடியேற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிகள் பெற்றுக்கொண்டனர். குடியேற்றங்களின் நிர்ணயிப்பு முழுவதுமே இரணைமடுக்குளத்தின் கொள்ளளவை மையமாகக்கொண்டு இருந்ததை இது காட்டுகிறது. இவ்வகையில் 1955ஆம் ஆண்டில் இக்குளத்தின் அணைக்கட்டை உயர்த்தும் 3 வது பாரிய புனரமைப்பு வேலைகள் தொடங்கப்பட்டது. குளஅணையின் உயரமானது 28 அடியிலிருந்து 30 அடியாக உயர்த்தப்பட்டதுடன் குளத்தின் நீர்க் கொள்ளளவு 82,000 ஏக்கர் அடி நீராக உயர்த்தப்பட்டது. இப்புனரமைப்பைத்தொடர்ந்து ஏற்பட்ட நீர் அதிகரிப்பை மையமாகக் கொண்டு வலதுகரை வாய்க் காலில் இராமநாதபுரம் என 3 ஏக்கர் தாழ் நிலங்களும் 2 ஏக்கர் உயர்நிலங்களும் கொண்ட 2,325 ஏக்கர்கள் 465 குடியான்களுக்கு வழங்கப்பட்டது. இந்த அடிப்படையில் இரணைமடு நீர்மூலத்தினை அடிப்படையாகக் கொண்டு வறண்ட வலய குடியேற்றத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 6 முக்கிய குடியான்கள் குடியேற்றங்களிலும் 4,914 ஏக்கர் நிலங்கள் இருபோகமும் நெல் பயிரிடக்கூடிய பாசன நிலங்களாகவும் 3,465 ஏக்கர் நிலங்கள் மேட்டுப் பயிர்ச்செய்கை நிலங்களாகவும் வழங்கப்பட்டு கிளிநொச்சியின் மையநகர எழுச்சிக்கான அடிப்படைச் சனச்செறிவு எடுத்துவரப்பட்டுள்ளது.

குடியேற்றங்கள் எப்போதும் வெற்றி பெறுவதற்கு 2 விசைகளின் தொழிற்பாடு அவசியம் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

1. இழுவிசை (Full factor)
2. தள்ளுவிசை (Push factor)

இழுவிசை என்பது புதிதாக உருவாக்கப்படும் குடியேற்றத்தை நோக்கி குடியேற்றக்காரர்கள் தன்னியல்பாக இழுத்து வரக்கூடியதாகச் செய்யப்படும். உட்கட்டுமான அபிவிருத்தியும் வசதியளிப்புக்களைக் குறித்து நிற்கின்றது. இவ்வாறான குடியேற்றப் பிரதேச கவர்ச்சிக் காரணிகள் குடியேற்றம்மீது ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே இந்த தன்னியல்பான குடியேற்றப்பொறிமுறை (Voultory Resettelement Mechanism) கவர்ச்சிக் காரணியாக அமையமுடியும். கிளிநொச்சியின் குடியேற்றப் பொறிமுறையில் நெற்செய்கைக் காணிகளை வழங்குதல் அதற்கான இருபோக நீர்விநியோகத்தை உறுதி செய்தல் மேட்டு நிலக்காணிகளை வழங்குதல் குடியேற்றக்காரர்களுக்குத் தேவையான வீட்டு வசதிகள் வழங்கல், மலகூடம், குடிநீர்க்கிணறுகள் வழங்கல், பொது வசதிகளான பாடசாலைகள், வைத்தியசாலைகள், வீதி அபிவிருத்தி, விவசாய விரிவாக்கல் சேவைகள், உள்ளீடுகளின் வழங்கல் ஆகிய அனைத்துத் தேவைகளையும் அரசு அக்காலத்தில் வழங்கி இருந்தது. எனினும் வன்னிப்பிரதேசம் பற்றிய யாழ்ப்பாண சமூகத்தின் எடுகோளை இங்கு நிலவிய மலேரியா நோயின் தாக்கமும் அதிகளவு கவர்ச்சியுடைய ஒரு நிலையை 1950களில் நிர்ணயிக்கவில்லை என்பதால் இழுவிசைக் கூடான சமூக உருவாக்கம் பெருமளவிற்கு இடம்பெற்றிருக்கவில்லை.

தள்ளுவிசை என்பது குடியேற்றக்காரர் ஒருவர் தான் வாழும் சூழலில் வாழமுடியாத நிலையில் பிறிதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சிப் பகுதி நோக்கி தானாக வெளிக்கிளப்பப்படக்கூடிய சூழல் நிலவுவதால் தூண்டப்படும் குடியேற்றத்தை குறித்து நிற்கிறது. இவ்வகையில் யாழ்ப்பாண சமூகத்தில் இருந்து அதிகளவு பிரச்சாரம் கிளிநொச்சி குடியேற்றத்திற்கென செய்யப்பட்ட போதும் தீவகத்திலும் நிரந்தரக் காணியற்று கலட்டிக் காணிகளில் குடியிருந்தோருமே கிளிநொச்சி நோக்கி நகர்ந்து வந்தனர். குறிப்பாக நெடுந்தீவு, நயினாதீவு, மண்டைதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் போன்ற தீவக பிரதேசங்களிலிருந்து குடிநீருக்காக பிரச்சினைகளை எதிர்கொண்டோர் அதிகளவில் இக்குடியேற்றத்தை நோக்கி படையெடுத்திருந்தனர். யாழ்ப்பாணத்திலிருந்தும் வாதரவத்தை, புத்தூர், நீர்வேலி, வரணி போன்ற பகுதிகளில் இருந்த நிலமற்றோரும் இக்குடியேற்றத்தினை நோக்கி நகர்ந்து வந்தனர். இவ்வகையில் ஆரம்பகால குடியேற்றம் நோக்கி நகர்ந்துவந்த சனத்தொகையானது தமது பிரதேசங்களில் நிலவிய தள்ளுவிசை காரணிகளால் வெளியேற்றப்பட்டு வந்தவர்களாகவே இருந்துள்ளனர்.

இரணைமடு குளத்தின் நீரைப் பயன்படுத்தி குடியேற்றப்பட்ட குடியேற்றங்கள் கிளிநொச்சியின் பிரதான சமூக உருவாக்கத்தின் பிறப்பிடமாகவும் தலைமைத் தன்மையான கிராமங்களின் வளர்ச்சிக்குரியனவாகவும் அமைந்துள்ளது. இக்குளத்தின் கீழ் ஆரம்பம் முதல் இன்றுவரை வழங்கப்பட்ட நிலக்குடியேற்றங்கள் பின்வரும் திட்டங்களின் கீழ் இடம்பெற்றுள்ளன.

1. குடியான்கள்குடியேற்றத்திட்டங்கள்
   Peasant Settlement Scheme
2. மத்திய வகுப்பினர் குடியேற்றங்கள்
   Middle Class Scheme
3. இளைஞர் குடியேற்றத்திட்டங்கள்
   Youth Settlement Scheme
4. கிராம விஸ்தரிப்புத்திட்டங்கள்
   Rural Expansion Settlement Scheme

இவ்வகையில் இரணைமடுக் குளத்தின் நீரை மையமாகக்கொண்டு வழங்கப்பட்ட மத்திய வகுப்பினர் குடியேற்றங்களாக 1952இல் ஆற்றுப் பகுதியில் 87 பேருக்கு 9 ஏக்கர் மேட்டு நிலம் என்றவகையில் வழங்கப்பட்டு 783 ஏக்கர் நிலத்துடன் ஆரம்பித்தது. 1956 இல் வெலிக்கண்டல் பகுதியில் 5 ஏக்கர் தாழ்நிலங்கள் வீதம் 22 பேருக்கு 110 ஏக்கர்கள் வழங்கப்பட்டிருந்தது. 1959 இல் வில்சன் வீதி பகுதியில் அரை ஏக்கர் மேட்டுநிலங்கள் வீதம் 31 பேருக்கு 15.5 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டது. 1959ஆம் ஆண்டில் பரந்தன் பிளம் வீதி பகுதியில் 10 ஏக்கர் தாழ் நிலம் வீதம் 268 பேருக்கு 2680, ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டதுடன் 1960ஆம் ஆண்டில் கோரக்கன்கட்டு பகுதியில் 5 ஏக்கர் வீதம் தாழ்நிலங்கள் 114 பேருக்கு 570 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டன. இதே வருடம் பரந்தன் வெளிப்பகுதியில் 10 ஏக்கர் தாழ்நிலம் வீதம் 93 பேருக்கு 930 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டதுடன் கமறிகுடா பகுதியில் 10 ஏக்கர் தாழ் நிலம் வீதம் 20 பேருக்கு 200 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டது. மத்தியதர வர்க்கத்தின் காணி வழங்கலுக்கூடாக அப்போது நெல்விளைவின் மீதான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தன்னிறைவு குறித்து அதிக கவனம் காரணமாகவே அரசு இத்திட்டத் தினைச் செயற்படுத்தியது. இக்காணி களைப் பெற்றுக்கொண்ட பலர் அங்கு வந்து குடியேற மறுத்ததுடன் குடா நாட்டிலும் கொழும்பிலும் இருந்து கொண்டு நிலங்களைப் பயன்படுத் தியதான நிலைமை காரணமாக நிலத் துக் குவராத நிலச்சுவாந்தர்கள் முறைமை (Absentees Land Lord) உருவா கத் தொடங்கியது. (கா.சிவத்தம்பி) அது இன்றுவரை மாற்றம்பெறாது தொடர்ந்து வருவதும் குறிப்பிடத் தக்கது.

இரணைமடுக் குளத்தினை அடிப் படையாகக் கொண்ட கிராம விஸ்த ரிப்பு திட்ட குடியேற்றங்களாக 1961ஆம் ஆண்டில் உமையாள்புரம் பகுதியில் 3 ஏக்கர் தாழ்நிலம் 2 ஏக்கர் உயர்நிலம் என்ற அடிப்படையில் 162 பேருக்கு வழங்கப்பட்ட 486 ஏக்கர் தாழ்நிலங்களும் 324 ஏக்கர் உயர் நிலங்களும் வழங்கப்பட்டன. 1966 ஆம் வருடத்தில் வெலிக்கண்டல் பகுதியில் 4 ஏக்கர் உயர் நிலம் வீதம் 79 பேருக்கு 316 ஏக்கர் வழங்கப்பட்டன. 1967ஆம் ஆண்டில் ஊரியான் பகுதியில் 3 ஏக்கர் உயர்நிலம் வீதம் 35 பேருக்கு 105 ஏக்கர் நிலங்கள் பகிர்ந்து வழங்கப்பட்டன. 1968ஆம் ஆண்டில் கோரக்கன்கட்டு பகுதியில் 3 ஏக்கர் உயர் நிலம் வீதம் 297 பேருக்கு 891 ஏக்கர் நிலங்கள் பகிரப்பட்டிருக் கின்றன. கிராம விஸ்தரிப்புத் திட்டங் கள் ஆரம்பகால குடியேற்ற கிராமத்த வருக்கு ஏற்பட்ட நிலப்பசி காரண மாக விரிவாக்கப்பட்ட கிராமங்க ளாக பின்னர் மாறியபோதும் ஆரம் பத்தில் இக்கிராமங்கள் புதிய குடியேற்றகாரர்களுக்கே வழங்கப்பட் டிருக்கின்றன.

இக்குளத்தின் கீழ் 1966ஆம் ஆண்டில் படித்த இளைஞர் குடியேற் றம் என்றவகையில் திருவையாறு பகுதி 1 இல் 3 ஏக்கர் மேட்டுநிலம் வீதம் 102 பேருக்கு 306 ஏக்கர் நிலங் கள் வழங்கப்பட்டன. இளைஞர் களின் வேலையின்மைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட இத்திட்ட மானது 1977ஆம் ஆண்டில் இரணை மடு மீது செய்யப்பட்ட நான்காவது புனரமைப்புடன் மேலும் வேகப்படுத் தப்பட்டது. 1977இல் இரணை மடுவின் உயரம் 34 அடியாக உயர்த் தப்பட்டதுடன் இதன் நீர் கொள்ளள வானது 106,500 ஏக்கரடி நீராக உயர்த்தப்பட்டது. அதனைத்தொடர் ந்து ஏற்று நீர்ப்பாசன நீர் பொறிமுறை மூலம் நீரைப்பெறும் இளைஞர் குடியேற்றத் திட்டமாக 1972 இல் திருவையாறு பகுதி 2 இல் 2 ஏக்கர் உயர்நிலம் வீதம் 39 பேருக்கு 78 ஏக்கர் களும் திருவையாறு பகுதி 3 இல் 3 ஏக்கர் உயர்நிலம் வீதம் 266 பேருக்கு 798 ஏக்கர் நிலங்களும் வழங்கப்பட் டுள்ளன. இவ்வகையில் பெரும் போகத் தில் சராசரியாக 3,25,000 ஏக்கர் அடி நீரையும் சிறுபோகத்தில் 12,000 ஏக்கர் அடி நீரையும் பெறக்கூடிய நீர் வரத்துக்கொண்ட இக்குளத்தின் கொள்ளளவு மட்டம் (Irrigation Engineer 1998) இப்பிரதேசத்துடன் வாழும் மக்களின் இருப்பை உறுதிசெய்யும் நிர்ணயக் காரணியாக இருந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இரணைமடுக் குளம்

நெத்தலி ஆற்றுப்படுக்கையும் கல்மடுக் குளமும்

கிளிநொச்சியின் கிழக்குப் பகுதி நோக்கி 11 மைல் தொலைவில் இரணைமடுவுக்குக் கிழக்கே அமைந்துள்ள நெத்தலியாற்றுப்படுக்கையானது 1951-53 காலப்பகுதியில் மறிக்கப்பட்டு கல்மடுக்குளம் அமைக்கப்பட்டது. 26.5 சதுர கிலோமீற்றர் நீரேந்து பிரதேசத்தைக் கொண்ட இக்குளமானது 9150 ஏக்கரடி நீரை கொள்திறனாகக் கொண்டதாகும். இத்தேக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு 1955ஆம் ஆண்டு மத்திய வகுப்பினர் குடியேற்றத்திட்டத்தின் கீழ் தலா 10 ஏக்கர் தாழ்நிலங்கள் 174 பேருக்கு 1740 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு கண்டாவளைத் திட்டம் தொடங்கப்பட்டது. 1958ஆம் ஆண்டில் மத்திய வகுப்பினர் திட்டத்தின் கீழ் தலா 10 ஏக்கர் தாழ்நிலமும் 5 ஏக்கர் உயர்நிலமும் கொண்ட 45 நிலவுடமையாளர்களுக்கு 450 ஏக்கர் தாழ்நிலங்களுக்கும் 225 ஏக்கர் உயர் நிலங்களுக்கும் நீர் வழங்கப்பட்டு கல்மடுநகர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதே வருடத்தில் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் 2 ஏக்கர் தாழ்நிலம் 1 ஏக்கர் உயர்நிலம் என்ற அடிப்படையில் 72 குடும்பங்களுக்கு 144 ஏக்கர் தாழ்நிலங்களும் 618 பேருக்கு 618 ஏக்கர் உயர் நிலங்களும் வழங்கப்பட்டு தருமபுரம் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டது. கல்மடுக் குளம் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு இனமுரண்பாட்டு வன்செயலில் தென்பகுதியிலும் மலையகத்திலும் இருந்து இடம்பெயர நேரிட்ட மக்களுக்கென இத்தருமபுரக் குடியேற்றம் உருவாக்கப்பட்டதாயினும் 618 குடும்பங்களில் 72 பேருக்கு மட்டுமே நீர் உரிமை வழங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட நிலங்கள் வழங்கப்பட்டது இது ஒரு மோசமான தீர்மான மென்றே இன்றுவரை விமர்சிக்கப் படுகின்றது. கல்மடுக்குளத்தின் நீரில் இருந்து கண்டாவளைப் பிரதேச மக்கள் நீரைப் பெறுவதற்காக 1400 ஏக்கர் அடி நீரைக் கொள்ளளவாகக் கொண்ட பெரியகுளத்தை நீருட்டிக் குளமாக (Feeder Tank) பயன்படுத்தி நீர்வழங்கும் அதேநேரம் தருமபுரத் தூடாக கடந்து செல்லும் நீர் அம்மண் ணையும் மக்களையும் நனைக்காது செல்வது இக்கிராமம் வறுமையில் மூழ்கக் காரணமாகவுள்ளது. இக்குளம் 2008 ஆம் ஆண்டில் முழுமையாகத் தகர்க்கப்பட்டு 2010ஆம் ஆண்டில் மீளவும் புனரமைக்கப்பட்டபோது 2 அடி உயரத்தினால் இதன் அணைக் கட்டு உயர்த்தப்பட்டு மேலதிகமாக ஏக்கரடி நீர் கொள்திறன் அதிகரிக்கப் பட்டிருப்பதனால் இப்போது தர்ம புரம், நாகேந்திரபுரம், புளியம்பொக் கணை, கலவெட்டித்திடல், பெரிய குளம் ஆகிய பகுதி மக்கள் தமக்கு இந்நீரில் உரிமை வழங்கப்பட வேண்டு மென கோரி வருவதும் அது தற்காலிக அடிப்படையில் உடன்பாடு எட்டப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



அக்கராயன் ஆற்றுப்படுக்கையும் அக்கராயன் குளமும்

யாழ்ப்பாணம் கண்டி வீதியின் 150வது மைல் கல்லிற்கு மேற்காகப் பாயும் இவ் ஆற்றுப்படுக்கையானது 7வது மைல்கல் பகுதியில் மறிக்கப் பட்டு முறிகண்டிக்குளம் அமைக்கப் பட்டு 1800 ஏக்கரடி நீரைக்கொள்ள ளவாகக் கொண்ட பழைய முறு கண்டிக் கிராமத்திற்கு 420 ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர் வழங்கப்படு வதுடன் அதிலிருந்து வெளியேறும் மேலதிக நீரை பூநகரி- முறுகண்டி வீதியின் 10 மைல்கல்லில் அமைக் கப்பட்ட 45 சதுரமைல் நீரேந்து பிரதேசத்தைக் கொண்ட 21300 ஏக்கரடி நீரைக் கொள்ளளவாகக் கொண்டுள்ள அக்கராயன் குளமானது ஆறு பிரதான கிராமங்கள் கிளிநொச்சி யில் எழுச்சிபெற அடிப்படையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. 1954ஆம் ஆண்டு மத்திய வகுப்பினர் திட்டத்தின் கீழ் அக்கராயன் கோணாவில் பகுதியில் தலா 10 ஏக்கர் தாழ்நிலங்களும் 5 ஏக்கர் மேட்டுநிலங்களும் 119 பேருக்கு வழங்கப்பட்டதுடன் 1000 ஏக்கர் தாழ்நிலங்களும் 500 ஏக்கர் உயர் நிலங்களும் கொண்ட அக்கராயன் கோணாவில் கிராமங்கள் உருவாக்கப் பட்டன. அதனைத்தொடர்ந்து 1962 ஆம் ஆண்டில் குடியான்கள் குடி யேற்ற முறைமையின் கீழ் ஸ்கந்தபுரம் படிவம் 1 கிராமத்தில் 3 ஏக்கர் தாழ் நிலங்கள் 2 ஏக்கர் உயர்நிலங்கள் கொண்ட 332 குடும்பங்களுக்கு 664 ஏக்கர் உயர்நிலங்களும் 996 ஏக்கர் தாழ்நிலங்களும் பகிர்ந்து வழங்கப் பட்டன. 1963ஆம் ஆண்டில் குடியான் கள் குடியேற்றத்திட்ட முறைமையின் கீழ் உருவாக்கப்பட்ட அக்கராயன் படிவம் 2 கிராமமானது 3 ஏக்கர் தாழ்நிலம் 2 ஏக்கர் உயர்நிலம் கொண்ட 156 குடும்பங்களுக்கு 312 ஏக்கர் உயர்நிலங்களும் 468 ஏக்கர் தாழ்நிலங்களும் பகிர்ந்து வழங்கப் பட்டன. தொடர்ந்து 1964ஆம் ஆண்டில் குடியான்கள் குடியேற்றத் திட்டமாக அக்கராயன் படிவம் 3 கிராமம் உருவாக்கப்பட்டு 2 ஏக்கர் தாழ்நிலம், 2 ஏக்கர் உயர் நிலம் என்ற அடிப்படையில் 112 பேருக்கு 224 ஏக்கர் உயர்நிலங்களும் அதேயளவு தாழ்நிலங்களும் பகிர்ந்து வழங்கப் பட்டன. தொடர்ந்து அக்கராயன் குளத்தின் புனரமைப்பு வேலைகளை தொடர்ந்து 1971ஆம் ஆண்டில் அக்கராயன் மத்தி பகுதியில் மத்திய வகுப்புத் திட்டமாக 5 ஏக்கர் தாழ்நிலம் 5 ஏக்கர் உயர்நிலம் கொண்ட 150 தாழ்நில உடைமையாளர்களுக்கு 750 ஏக்கர் தாழ்நிலங்களும் 128 உயர்நில குடியேற்றகாரர்களுக்கு 640 ஏக்கர் உயர்நிலங்களும் பகிர்ந்து வழங்கப் பட்டன. இதே குளத்தின் நீரை மைய மாகக் கொண்டு கண்ணகைபுரம் கிராமம் இளைஞர் குடியேற்ற முறை மையின் கீழ் 1974ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 2 ஏக்கர் உயர் நிலம் என்ற அடிப்படையில் 144 குடும்பங்கள் 288 ஏக்கர் காணிகளைப் பெற்றுக்கொண்டன. வாய்க்கால் நீர்ப்பாசன வசதி மூலம் அக்கராயன் குளத்தின் நீர் இக்கிராமத்துள் மேட்டு நிலசெய்கைக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

**மண்டக்கல் ஆற்றுப்படுக்கையும் வன்னேரிக் குளமும்**

அக்கராயன் ஆற்றுக்குக் கிழக்கே காணப்படும் இவ்ஆற்றுப்படுக்கை யானது புளியங்குளத்திற்கு வடமேற் காகச் செல்லும் 181 சதுரமைல் நீரேந்து பரப்பைச் சார்ந்து செல்லும் 25 மைல் நீளமான நதிப்படுக்கை கொண்டதாகும். 72400 ஏக்கர் அடி நீரைக் கொள்ளக்கூடியதாக காணப் படும் இவ் ஆற்றுநீரில் இதுவரை 50000 ஏக்கரடி நீரே பயன்பாட்டுக் குக் கொண்டுவரப்பட்டுள்ளது. கோட்டை கட்டியகுளம், அம்பலப் பெருமாள்குளம், அக்கராயன்குளம், மணியங்குளம் வன்னேரிக்குளம் ஆகியவற்றினூடாக இத்தொகை நீர் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட் டிருப்பினும் அக்கராயன் வன்னேரி ஊடாக பாய்ந்து செல்லும் மேலதிக நீரைப் பூநகரிக்கு அண்மியதாக கொக்குடையான், மாளப்பு பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஒன்றிணைத்து பூநகரிக்குளம் உருவாக்கப்பட வேண்டும் என்ற ஆய்வை நீர்ப்பாசனத் திணைக்களம் திட்ட வடிவுக்கு கொண்டு வந்திருக்கிறது. இது சாத்தியப்படுமாயின் ஆலங்கேணி நல்லூர் குடமுருட்டி முட்கொம்பன், கொல்குறிச்சி, தம்பிராய், ஞானிமடம், கறுக்காய்தீவு உட்பட பூநகரியின் பெரும்பகுதி பிரதேசங்கள் உவர் தடுப்பு செய்யப்படுவதுடன் நீர் வசதியையும் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மண்டல்கல் ஆற்றுப்படுக்கையை ஆதாரமாகக் கொண்டு 1961இல் 1880 ஏக்கர் அடி கொள்ளளவை கொண்ட 400 ஏக்கர் செய்கை பண்ணக்கூடிய கோட்டை கட்டிய குளமும் 1960இல் 3050 ஏக்கர் அடி நீரைக் கொள்ளளவாகக் கொண்ட 1000 ஏக்கர் செய்கை பண்ணக்கூடிய அம்பலப்பெருமாள் குளமும் முல்லைத்தீவு மாவட்ட பரப்பில் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. முறுகண்டி பூநகரி வீதியின் 12வது மைல் கல்லில் ஐயங்கன் ஆறு என அழைக்கப்படும் சிறிய ஆற்றை யும் மண்டல்கல் ஆற்று நீர் பெறுகையும் கொண்ட இரண்டு தனி அணைகளையும் ஒரே வெளி வளியி னைக் கொண்ட வன்னேரிக் குளமானது 1950ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டது. 1713 ஏக்கர் அடி நீரை கொள்ளளவாகக் கொண்ட இக்குளமானது 5 சதுரமைல் நீரேந்து பிரதேசத்தைக் கொண்டதாகும். இக்குள நிர்மாணத்தைத் தொடர்ந்து 1954ஆம் ஆண்டு குடியான்கள் குடியேற்றத் திட்டத்தின் கீழ் 3 ஏக்கர் உயர்நிலம் 3 ஏக்கர் தாழ்நிலம் என்ற அடிப்படையில் 119 தாழ்நில உடைமையாளர்களுக்கு 357 ஏக்கர்களும் 112 உயர் நில உடமையாளர்களுக்கு 336 ஏக்கர்களும் வழங்கப்பட்டு வன்னேரிக்குள கிராமம் உருவாக்கப்பட்டது.

**பல்லவராயன்கட்டு நதிப்படுக்கையும் கரியாலை நாகபடுவான் குளமும்**

துணுக்காய் பிரதேசத்தினை மையமாகக்கொண்டு ஆரம்பிக்கும் தேராங்கண்டல் ஆற்றினதும் பல்லவராயன் ஆற்றினதும் இணைப்புக்கூடாக இந்நதிப்படுக்கை உருவாகியுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு 4400 ஏக்கர் அடி நீரைக் கொள்ளளவாகவும் 17.75 சதுரமைல் பரப்பை நீரேந்து பிரதேசமாகவும் கொண்ட தென்னியங்குளம்1950ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு 700 ஏக்கர் தாழ்நிலங்கள் நீர்வசதி பெற்றுள்ளன. இது முல்லைத்தீவு மாவட்ட ஆளுகைக் குட்பட்டிருக்கிறது பூநகரி மன்னார் வீதியின் 3 மைல் கிழக்கே 55 சதுர மைல் பிரதேசத்தை நீரேந்து பரப்பாக கொண்ட 7700 ஏக்கரடி நீரை கொள்ளளவாகக் கொண்ட கரியாலை நாகபடுவான் குளம் 1960 இல் நிர்மாணம் செய்யப்பட்டது. இதனை ஆதாரமாகக்கொண்டு 1962ஆம் வருடத்தில் குடியான்கள் குடியேற்றமாக 2 ஏக்கர் தாழ்நிலம் 2 ஏக்கர் உயர் நிலம் என்றவகையில் 607 குடும்பங்களுக்கு 1274 ஏக்கர் தாழ்நிலங்களும் 593 உயர்நில உடைமையாளர்களுக்கு 1186 ஏக்கர் உயர்நிலங்களும் வழங்கப்பட்டு கரியாலை நாகபடுவான் கிராமம் உருவாக்கப்பட்டது. 1966 இல் கிராம விஸ்தரிப்புத்திட்டத்தின் கீழ் பல்லவராயன்கட்டு தாழ்நிலம் 3 ஏக்கர் தாழ்நிலம், 2 ஏக்கர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்நிலம் என்ற அடிப்படையில் 607 தாழ்நில செய்கையாளர்களுக்கு 1274 ஏக்கர் தாழ்நிலங்களும் 593 பேருக்கு 1186 ஏக்கர் உயர்நிலங்களும் பகிர்ந்து வழங்கப்பட்டது. 1984 இல் குடியான்கள் குடியேற்றம் என்ற வகையில் 1 ஏக்கர் தாழ்நிலம் 1.5 ஏக்கர் உயர்நிலம் என்றவகையில் 448 பேருக்கு 448 ஏக்கர் வயல் நிலங்களும் 672 ஏக்கர் உயர்நிலங்களும் வழங்கப்பட்டு ஜெயபுரம் கிராமம் உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது தும்புருவில் என அழைக்கப்பட்டபோதும் அது இப்போது ஜெயபுரம் என்றே நிலை பெற்றுள்ளது. இதேவேளை முழங்காவில் பகுதியில் 1968ஆம் ஆண்டு குழாய் நீர் பொறிமுறையுடன் 5 ஏக்கர் உயர்நிலம் வீதம் 46 பேருக்கு 230 ஏக்கர்கள் வழங்கப்பட்டு முழங்காவில் கிராமம் உருவாக்கப்பட்டது. கிராஞ்சி பகுதியிலும் 2 ஏக்கர் தாழ்நிலம் 4 ஏக்கர் உயர்நிலம் என்ற வகையில் 101 தாழ்நில செய்கையாளர்களுக்கு 202 ஏக்கர்களும் 521 உயர்நில உடைமையாளர்களுக்கு 1186 ஏக்கர்களும் பகிர்ந்து வழங்கப்பட்டன.

**கலவலப்பு ஆற்றுப்படுக்கையும் புதுமுறிப்புக் குளமும்**

முறுகண்டி பூநகரி வீதியின் 5 வது மைல்கல்லுக்கு வடக்கே 3 மைல் தொலைவில் அப்பகுதியூடாக பாய்ந்த கலவலப்பு ஆற்றினைமறித்து நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மத்திய தர குளமாக 1954இல் நிர்மாணிக்கப்பட்டது. 27.2 சதுர கிலோமீற்றர் பகுதியினை நீரேந்து பிரதேசமாகக் கொண்ட இக்குளம் 2908 ஏக்கர் அடி நீரை கொள்திறனாகக் கொண்டதாகும் இதன் நீர் மூலத்தினை அடிப்படையாகக் கொண்டு சிவநகர் கிராம விஸ்தரிப்புத் உருவாக்கப்பட்டு 1 ஏக்கர் மேட்டு நிலமும் 1.5 ஏக்கர் தாழ்நிலம் வீதம் 223 பேருக்கு தாழ்நிலங்களும் 243 பேருக்கு உயர்நிலங்களும் வழங்கப்பட்டிருக்கின்றது. மத்திய வகுப்பினர் குடியேற்றத் திட்டத்தின் கீழ் 6 ஏக்கர் உயர்நிலம் 12 ஏக்கர் தாழ்நிலம் வீதம் 20 பேருக்கு 120 ஏக்கர் மேட்டு நிலங்களும் 240 ஏக்கர் தாழ்நிலங்களும் வழங்கப்பட்டு புதுமுறிப்பு மத்திய வகுப்புத்திட்டம் 1959இல் உருவாக்கப்பட்டது. இதே குளத்தினை ஆதாரமாகக் கொண்டு 1958-67 காலப்பகுதியில் 1 ஏக்கர் உயர்நிலம் வீதம் 264 பேருக்கு உயர்நிலங்கள் வழங்கப்பட்டதுடன் இதில் 1.5 ஏக்கர் தாழ்நிலம் வீதம் 124 பேருக்கு 186 ஏக்கர் தாழ்நிலங்களும் வழங்கப்பட்டு ஜெயந்திநகர் கிராமம் உருவாக்கப்பட்டது. கிராம விஸ்தரிப்பு திட்டங்களுக்கு நீர் வசதி பெற்றுக் கொடுத்த பெருமை புதுமுறிப்பு நீர் மூலத்திற்குள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் 58 கிராம விஸ்தரிப்புத் திட்டங்களில் 12 கிராம விஸ்தரிப்புத் திட்டங்களுக்கு மட்டுமே நீர்ப்பாசன வயல்கள் வழங் கப்பட்டுள்ளது.

**பிரமந்தனாறுப் படுக்கையும் பிரமந்தனாறுக் குளமும்**

பரந்தன் முல்லைத்தீவு வீதியின் 13வது மைல்கல்லுக்கு தெற்கே 3 மைல்களுக்கு ஆரம்பிக்கும் பிரமந்தனாற்றுப் படுக்கையின் நீர் மூலமாக கொண்டு இரண்டு குளங்களும் அவை சார்ந்து கிராமங்களும் உருவாக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. 12.5 சதுரமைல் நீரேந்து பிரதேசத்தைக்கொண்ட 3000 ஏக்கரடி நீரைக் கொள்திறனாகக் கொண்ட 600 ஏக்கர் நெல் நிலங்களுக்கும் நீர் வசதியளித்துள்ள விசுவமடுக்குளம் முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக பிரிவிற் குரியதாக அமைந்துள்ளது. 1960இல் இதே படுக்கையை அடிப்படையாகக் கொண்டு நீர்ப்பாசனத் திணைக்களத் தினால் நடுத்தரக்குளம் 1753 ஏக்கர் அடி நீரை கொள்திறனாகக் கொண்ட பிரந்தனாறு குளம் அமைக்கப்பட் டது. இதனை அடிப்படையாகக் கொண்டு 1974இல் இளைஞர் குடியேற்ற மாக பிரமந்தனாறு கிராமத்தில் 1.5 உயர்நிலம் வீதம் 602 இளைஞர் களுக்கு 903 ஏக்கர் உயர்நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1971ஆம் ஆண் டில் 3 ஏக்கர் உயர்நிலம் வீதம் 347 பேருக்கு 1041 ஏக்கர் வழங்கப்பட்டு இளைஞர் குடியேற்றமாக வழங் கப்பட்ட புன்னைநீராவி கிராமம் உருவாக்கப்பட்டது.

### கனகாம்பிகைக் குளம்

1969ஆம் ஆண்டு கனகராயன் ஆற்றுப்படுக்கையின் உபவாய்க்கால் களூடாக நீர் வளத்தைப்பெறும் நடுத்தரக் குளமாக 782 ஏக்கரடியை நீர் கொள்ளளவாகக் கொண்ட கனகாம்பிகைக் குளத்தின் அமைப் பினைத் தொடர்ந்து 100 விவசாயி களுக்கு 275 ஏக்கர் உயர்நிலங்கள் மேட்டுநிலச் செய்கைக்காக வழங்கப் பட்டுள்ளதுடன் கனகாம்பிகைக் குளம் கிராமம் உருவாக்கப்பட்டது.

### புதிய நடுத்தரக் குளங்களாக அபிவிருத்தி யடையவேண்டிய இரு நீர் மூலங்கள்

அக்கராயன் ஆற்றுபடுக்கையின் மேலதிக நீரையும் மண்டல்கல் ஆற்றி னது மேலதிக நீரையும் பெறக்கூடிய வாய்ப்புள்ள ஆனைவிழுந்தான் குளம் 500 ஏக்கர் தாழ்நிலங்களுக்கு நீர் வழங் கக்கூடிய வாய்ப்புடைய ஒரு சிறிய நீர்ப்பாசன நீர் மூலமாக காணப்படு கின்றது. இதனை நடுத்த நீர் மூலமாக மாற்றி அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதால் ஆனைவிழுந்தான் குள கிராமம் நீர்பெறும் வாய்ப்பைப் பெறக்கூடியதாக அமையும். அதே போல் அக்கராயன் குளத்தின் மேலதிக நீரும் கழிவுநீரும் சென்று சேரும் குடமுறுட்டிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் புனரமைக்கப் பட்டு நடுத்தர நிலைக்கு தரமுயர்த்தப் பட்டுள்ளது. இதன் கீழ் சின்னப்பல்லவ ராயன்கட்டு, கொக்குடையான், தியாகம் கிராமங்கள் நீர் வசதியுடைய நிலங்களை பெற்றுள்ளன.

### கிராம விஸ்தரிப்பு திட்டத்தினூடான குடியேற்ற விரிவாக்கம்

நீர் வசதியளிக்கப்பட்ட குடியான் கள் குடியேற்றம் மற்றும் புராண கிராமங்களில் வசித்தவர்களின் அதிக ரித்த நிலத்தேவையின் காரணமாக அவர்களின் இரண்டாம் தலைமுறை யினருக்கு ஏற்பட்ட நிலப்பசியினை ஈடுசெய்வதற்கென 1959ஆம் ஆண்டின் 2வது காணி ஆணைக்குழு சமர்ப்பித்த கொள்கைகளின் பிரகாரம் மக்களால் அபிவிருத்தி செய்யப்பட்ட காணி களுக்கு சட்டபூர்வ ஆவணம் வழங்கு வதன் மூலம் அவர்களுக்கு உரிமை யளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் இடம்பெற்ற கிராம விஸ்தரிப்பு திட்டங்களை 3 வகையாக இனம்காணமுடியும். அவையாவன:

1. குடியேற்ற பகுதிகளில் நிலவிய நிலப்பசி காரணமாகவும் குடியேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றங்களின் பால் ஏற்பட்ட இழு விசை காரணமாக ஈர்க்கப்பட்டோருக்கு நிலம் வழங்க உருவாக்கப் பட்ட குடியேற்ற கிராமங்கள்.

2. தென் இலங்கையில் ஏற்பட்ட இன முரண்பாடு காரணமாக பெருமளவில் இடம்பெயர்ந்து வந்த தோட்டத்துறை சமூகத்தினரது நிலத் தேவைக்காக உருவாக்கப்பட்ட குடியேற்றக் கிராமங்கள்.

3. புராண கிராமங்களின் நிலப்பசி காரணமாக உருவாக்கப்பட்ட கிராமங்கள்.

இவ்வகையில் குடியேற்றங்களில் ஏற்பட்ட நிலப்பசி காரணமாக உருவாக்கப்பட்ட கிராமங்களாக சிவநகர், திருநகர், ஜெயந்திநகர், எள்ளுக்காடு, இரத்தினபுரம், பரவிப் பாஞ்சான், ஆனந்தபுரம், கோரக்கன்கட்டு, குமரபுரம், உமையாள்புரம், கரியாலை நாகபடுவான் போன்ற ஆரம்பகால கிராம விஸ்தரிப்பு திட்டங்களாக அமைந்தன. ஒரு தூய நிலையில் இல்லாவிடினும் ஒப்பீட்டு அடிப்படையில் இக்கிராமங்கள் தொடக்கப்பட்டதற்கான மூலகாரணமாகக் கொள்ளக்கூடியதாக அமைந்த காரணியாகக் கொள்ளப்படும் வன்முறை காரணமாக இடம்பெயர்ந்த தோட்டத்துறை பிரிவினரது நிலத்தேவைக்காக உருவாக்கப்பட்ட கிராமங்களாக உதயநகர் மேற்கு உதயநகர் கிழக்கு, விவேகானந்தநகர், பாரதிபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம், விநாயகபுரம், ஊற்றுப்புலம், அப்பாள்குளம், செல்வாநகர், கந்தன்குளம், பொன்னகர், ஆனந்தநகர், தொண்டமான்நகர், சாந்தபுரம், குமாரசாமிபுரம், நாதன் திட்டம், உழவனூர், சம்புக்குளம், மாயவனூர், மயில்வாகனபுரம், கொழுந்துப்புலவு, ஆனைவிழுந்தான்குளம், அமைதிபுரம், ஆரோக்கியபுரம், ஜெயபுரம் வடக்கு, ஜெயபுரம் தெற்கு போன்ற கிராமங்களின் எழுச்சியை குறிப்பிடமுடியும்.

3வது வகைப்பாட்டில் உள்ளடங்கக்கூடிய புராண கிராமங்களின் சனத்தொகை உயர்வு காரணமாக அவர்களிடையே ஏற்பட்ட நிலத்தேவை காரணமாக உருவாக்கப்பட்ட கிராமங்களாக ஊரியான், கோரக்கன் கட்டு, சிவபுரம், சுபாஸ் குடியிருப்பு, கங்காதரன் குடியிருப்பு, இராசபுரம், ஈஸ்வரபுரம், சிவன் சோலை, முட்கொம்பன், நேரடம்பன், சின்னப் பல்லவராயன்கட்டு, தெளிகரை, யூனியன்குளம், காந்தி கிராமம், சோலை நகர், பன்னங்கண்டி, மருதநகர், புலிங்கதேவன்முறிப்பு, பெரியகுளம், தம்பிராசபுரம், கல்லாறு, கட்டைக் காடு, தொப்பிகலையடி, நாவல்நகர், புதுக்காடு, அன்னை வேளாங்கன்னி நகர் போன்ற கிராமங்கள் உருவாகியிருக்கின்றன.

யாழ்ப்பாண இடப்பெயர்வுடன் கிளிநொச்சி நோக்கி வந்த பலரும் இக்கிராம விஸ்தரிப்புத் திட்டக் காணிகளிலேயே அதிகளவுக்கு நிலங்களைப் பெறக்கூடியதாக இருந்ததால் பன்மை சமூகங்களும் வசிக்கும் கிராமங்களாகவே இப்போது இக்கிராமங்கள் காணப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மை சமூகங்கள் வாழ்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகள் சில இருந்துள்ளன. இவை யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சிப் பகுதியிலிருந்து விவசாயம் மந்தை வளர்ப்பு ஆகியவற்றுக்காக வந்து குடியேறிய மீசாலை, மட்டுவில், சாவகச்சேரி மற்றும் கச்சாய் பகுதிகளை சேர்ந்தவர்களே என பல ஆய்வுகள் நிரூபித்துள்ளன. இவ்வகையில் கிளிநொச்சியின் புராண கிராமங்கள் 1850களிலிருந்து கொம்படி வெளியினூடாக வந்து கண்டாவளைப் பிரதேசத்திற்கு வந்தோரினால் உருவாகிய கண்டாவளை கரவெட்டித்திடல், புளியம்பொக்கணை, ஊரியான், ஆனையிறவு மற்றும் தட்டுவன் கொட்டி ஆகிய கிராமங்கள் காணப்படுகின்றன. அப்போது யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்கு செல்வதற்கான வீதி புல்லாவெளி கொம்படி ஊரியான் - உடையார்கமம் - வட்டக்கச்சியூடாகவே சென்றதென்பதனை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பழைய கண்டி வீதியின் வரைபடம் காட்டி நிற்கின்றது. அதேபோல் தென்மராட்சியிலிருந்து கச்சாய்த் துறைமுகமூடாக சுட்டதீவுக்குள் வந்து சேர்ந்தவர்கள் பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன், செருக்கன், நீவில், சாமிப்புலம், நல்லூர் ஆலங்கேணி, கொல்ல குறிச்சி, வாடியடி, கிராஞ்சி, வேரவில் என புராண கிராமங்களில் வாழ்ந்துள்ளனர். இதேபோல் கொழும்புத்துறையிலிருந்து கௌதாரிமுனையூடாக வந்தவர்கள் மணித்தலை, கௌதாரிமுனை, பரமன்கிராய், மட்டுவில்நாடு மேற்கு, மட்டுவில் நாடு கிழக்கு, ஞானிமடம், தம்பிராய் பகுதிகளில் வாழ்ந்த தொன்மைக் கிராமங்களாகவுள்ளன. அதேநேரம் மீன்பிடித்தலை நோக்கமாகக் கொண்டு குருநகர், கொழும்புத்துறை, பாசையூர் பகுதிகளிலிருந்து பள்ளிக்குடா, நாச்சிக்குடா, இரணைதீவு, வலைப்பாடு போன்ற பகுதிகளுக்குரிய புராண கிராம மக்கள் வந்தமையைக் காண முடிகின்றது. இவ்வகையில் புராண கிராமங்களின் தொன்மை வரலாறு என்பதில் பச்சிலைப்பள்ளியின் 18 கிராம அலுவலர் பிரிவுகளும் இங்குள்ள கிராமங்களும் காணப்படுவதுடன் மேற்குறிப்பிட்ட கிராமங்களும் புராண கிராம வரலாற்றைக் கொண்டுள்ளதனைக் காணமுடிகின்றது.

இவ்வகையில் குடியேற்ற கிராமங்களின் எழுச்சியினை தொடர்ந்து புராண கிராமங்கள் பலவும் தமது முதன்மைத் தன்மையை இழந்து வந்ததனை காணக்கூடியதாகவுள்ளது. கிளிநொச்சி நகரம் என்பது ஆரம்ப காலத்தில் பழைய கண்டி வீதியினை அடியொற்றியதாக அமைந்திருந்தது. கொம்படி, ஊரியான், கண்டாவளை உடையார்காமம் வட்டக்கச்சியூடாக கரிப்பட்டமுறிப்பைச் சென்றடைந்த இவ்வீதியும் அதனூடாக குடியிருப்புக்களும் இரணைமடுவின் எழுச்சியுடன் புதிய கண்டிவீதி நோக்கி நகரத்தொடங்கியது. ஆரம்பத்தில் பெரியபரந்தன் - குஞ்சுப்பரந்தன் ஆகிய கிராமங்களை மையப்படுத்தி கரடிப்போக்குச் சந்தியில் அமைந்திருந்த நகர் மையம் காணப்பட்டது. குஞ்சுப்பரந்தனில் 1925ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கிளி/ பரந்தன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இம்மாவட்டத்தில் அமைக்கப்பட்ட முதலாவது பாடசாலையாக இருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் கரடிப்போக்கில் இருந்த கிராம சபை கட்டிட வளவிலேயே முதலாவது மையம் செயற்பட்டது.

அக்காலத்தில் கரடிப்போக்குக்கு அப்பால் முறுகண்டி மாங்குளம் வரை எந்த சனக்குடியிருப்புகளும் அற்ற காடுகளே காணப்பட்டன. அவ் வீதியில் காக்காகடை என அழைக்கப் படும் முஸ்லிம் ஒருவரின் தேநீர்க் கடை அமைந்திருந்தது. அதனால் தான் இன்றுவரை அச்சந்தி காக்கா கடைச்சந்தியென அழைக்கப்பட்டு வருகின்றது. வீதிவழியாக சென்ற யாழ்ப்பாண வாசிகள் இங்கு உணவ ருந்திச் சென்றதாகக் கூறப்படுகின்றது. பின்னர் 1938இல் கணேசபுரம் குடியான்கள் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கத் தொடங்கியதுடன் கரடிப்போக்கு நகர்மையம் மாற்றப் பட்டு கிளிநொச்சி கந்தசாமி கோவி லடிக்கு வந்து சேர்ந்து அங்கேயே பஸ் தரிப்பிடமும் அமைக்கப்பட்டது. அது இப்போது பழைய பஸ்ரான்ரடி என அழைக்கப்படுகிறது. எனினும் கிளிநொச்சியின் குடியேற்ற விரிவாக் கம் இந்நகரமையத்தை அங்கிருந்து சற்று நகர்த்தி தற்போது கரைச்சி பிரதேசசபை இயங்கும் இடத்தில் செயற்பட்டதுடன் 1972இல் அமைக் கப்பட்ட நவீன சந்தை தற்போது சர்வதேச விளையாட்டரங்கு அமைந் துள்ள பகுதிக்கு பின்புறம் நிர்மாணிக் கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அச்சந்தை கிளிநொச்சிநகரின் வரலாற் றில் மிக மகிழ்ச்சியான ஒரு காலப் பகுதியில் செயற்பட்டதென்றால் மிகையாகாது. வெளிநாட்டு இறக்கு மதி தடுக்கப்பட்டு உள்ளூர் உற்பத்திக் கென ஊக்குவிப்பு வழங்கப்பட்ட இக்காலத்தில் எல்லா உற்பத்திக் கிரா மங்களிலும் உச்சமட்ட உள்ளூர் உற்பத்திகள் விளைவிக்கப்பட்டு இச் சந்தைக்குக் கொண்டுவரப்பட்டது. புதன், சனி ஆகிய இரு நாள் வார சந்தைகளுக்கென தென்னிலங்கை வர்த்தகர்கள் படையெடுத்து வந்து பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டுசென்றனர். இலங்கை முழுவ திலுமே எமது உற்பத்திகள் விற்பனை செய்யப்பட்டன. குறிப்பாக வாழைக் குலை, மிளகாய், மரக்கறி என்பன இச்சந்தைக்கு அதிக மதிப்பை வழங்கி யிருந்தன. தற்போது தம்புள்ள நகரம் பெற்றுள்ள மதிப்பை கிளிநொச்சி 1960களிலும் 1970களிலும் 1980கள் வரை பெற்றிருந்தது. தொடர்ந்து முரண்பாடுகள் காரணமாக இந்நகரம் சோபை இழந்ததுடன் தற்போது புதிய அரச செயலகம் அமைந்துள்ள பகுதிக்கு மாற்றப்பட்டு பின்னர் டிப்போ சந்தி நோக்கி நகர்ந்து சென் றது. தற்போது இந்தநகர் மையம் ஒரு நாடாக் குடியிருப்பு நகரமாகவே இருந்து வருகின்றது. பரந்தன் முதல் இரணைமடு சந்திவரை இந்நகரம் தொடர்ந்து செல்வது மையநகர எழுச்சியினைத் தடுத்து வருகின்றது. அறிவியல்நகர் பிரதேசத்தை அடி யொற்றி எழுச்சிபெறும் கைத்தொழில் நகரம் கிளிநொச்சியின் நகர்மையம் மேலும் மாற்றமடைய தூண்டக் கூடியதாகும். இவ்வகையில் தற்போது அதிக பிரபலமான பிரதேசங்களாகக் காணப்படும் வட்டக்கச்சிப் பகுதி, அக்கராயன் பகுதி, உருத்திரபுரம் பகுதி என்பன இம்மாவட்டத்தின் குடி யேற்றக் கிராமங்களின் எழுச்சியையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிநிற்கின்றது. ஒரு பன்மை சமூகத்தின் உருவாக்கத்தினால் எழுச்சி பெற்றுள்ள இம்மாவட்டம் புராண கிராமத்தன்மையிலிருந்து நீண்டதூரம் கடந்து வந்து ஒரு புதிய சமூக சூழலை நிர்ணயித்துள்ளது. யாழ்ப்பாண கலாசாரத்தினாலோ அல்லது மலையக கலாசாரத்தினாலோ கட்டுப்படுத் தாத ஒரு பன்மைத் தன்மை வாய்ந்த குடியேற்ற கலாசாரத்தினால் உருவாக்கிய அழகிய நகராகவே கிளிநொச்சி இருந்து வருகின்றது.

**பின்குறிப்புப் பட்டியல்**


1. Arumugam . S Water resource of Ceylon it's utilization and development water resource board publication Colombo – 1969
2. Development of Irrigation record books Kilinochchi 1998
3. District Statistical Hand Book 1998
4. கணபதிப்பிள்ளை. அ "இலங்கையின் வரண்ட பிரதேசத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட விவசாயக் குடியேற்றத்திட்டங்களின் நிலவுடமைகளின் அளவும் உற்பத்தித் திறனும் முதுகலைமாணிபட்ட ஆய்வு, யாழ். பல்கலைக்கழகம்.
5. குணராசா . க " கிளிநொச்சியின் கதை கிளிநொச்சி கந்தசாமி கோயில் மகா கும்பாபிசேக மலர்" - ஆலய பரிபாலன சபை வெளியீடு – 1990.
6. சுப்பிரமணியம் .எஸ் "கிளிநொச்சி மாவட்ட வளத் தகவல் திரட்டு" உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், கிளிநொச்சி – 1998.
7. கேதீஸ்வரன் . அ "கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்ப்பாசன விவசாயமும் நீர் முகாமைத்துவமும்" முதுகலைமாணி ஆய்வு , யாழ் பல்கலைக்கழகம் 2001.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

## காப்பு

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

ஆத்திசூடி - திருவாத்திப்பூ மாலையை அணிந்த சிவபெருமான் - அமர்ந்த தேவனை விரும்பிய பிள்ளையாகிய விநாயகக் கடவுளை ஏத்தி ஏத்தி - துதித்துத் துதித்து யாம் தொழுவோம் - நாங்கள் வணங்குவோமாக.

**1.அறஞ் செய விரும்பு**

அறம் - தருமத்தை செய் - செய்ய விரும்பு - விரும்புவாயாக

**2. ஆறுவது சினம்**

ஆறுவது - ஆற்றிக் கொள்ள வேண்டியது சினம் - கோபமேயாகும் (கோபத்தை அடக்கு)

**3. இயல்வது கரவேல்**

இயல்வது - உன்னால் உதவக்கூடியதொன்றை : கரவேல் - உதவாது ஒளிக்காதே

**4. ஈவது விளம்கேல்**

ஈவது - பிறர் கொடுப்பதை : விலக்கேல் - தடுக்க முயலாதே

**5. உடையது விளம்பேல்**

உடையது - மறைக்கவேண்டியுள்ள இரகசியத்தை விளம்பேல் - பிறரிடம் சொல்லாதே.

**6. ஊக்கமது கைவிடேல்**

ஊக்கமது - விடாமுயற்சியை : கைவிடேல் - கைவிட்டு விடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எண் எழுத்து இகழேல்

எண் எழுத்து - கணித இலக்கண இலக்கிய நூல்களை இகழேல் - கற்பதற்குப் பின் நிற்காதே.

8. ஏற்பது இகழ்ச்சி

ஏற்பது - பிச்சையெடுப்பது இகழ்ச்சி - மிக இழிவான செயலாகும்.

9. ஐயம் இட்டுண்

ஐயம் - (இரந்து வருவோருக்குப்) பிச்சை இட்டு உண் - முதலிற் கொடுத்துப் பின்னரே நீ உணவு உண்.

10. ஒப்பரவு ஒழுகு

ஒப்பரவு - உலக நடைமுறையை (அறிந்து) ஒழுகு - நீயும் அதற்கமைய நடந்துகொள்.

11. ஓதுவது ஒழியேல்

ஓதுவது - கல்வி கற்கும் வழக்கத்தை ஒழியேல் - கைவிட்டு விடாதே

12. ஔவியம் பேசேல்

ஔவியம் - பொறாமை காரணமாக, வஞ்சனை நிறைந்த வார்த்தைகளை பேசேல் ஒருபோதும் நீ பேசாதே.

13. அஃகம் சுருக்கேல்

அஃகம் - தானியங்களை (விளைவிப்பதை) சுருக்கேல் - குறைத்துக் கொள்ளாதே.
(அளந்து கொடுக்கும்போது அளவைக் குறைக்காதே என்றும் கூறலாம்)

14. கண்டொன்று சொல்லேல்

ஒன்று கண்டு - ஏதாவது ஒன்றைக் கண்டிருந்தும் (ஒன்று) சொல்லேல் அதனைக் கூறாது காணாத பிறிதொன்றைக் கூறாதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. நுப்போல் வளை

நுப்போல் - சொல்லின் முதலில் அல்லது இறுதியில் வரும் வழக்கம் இல்லாத நகரம் ஏனைய எழுத்துக்களோடு கூடிச் சொல்லாக்கத்தில் இடம் பெறுவது போல வளை - நீயும் பிறரை அணைத்து நன்மை அடை (இதற்கு நகரம் ஒன்றே சொல்லாக்கத்துக்குப் பயன்படுவது. அதற்காக அவ்வரிசையிலுள்ள பயன்படாத ஏனைய பதினொரு உயிர்மெய்களும் அரிச்சுவடியில் இடம் பெறுகின்றன. அவ்வாறு சுற்றத்தைத் தழுவிக்கொள் என்றும் பொருள் கொள்ளலாம்)

16. சனி நீராடு

சனி - சனிக்கிழமை தோறும் நீராடு - எண்ணெய் தேய்த்து முழுகும் வழக்கத்தைத் தவற விடாதே.

17. ஞயம்பட உரை

ஞயம்பட - பிறருடைய உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படக் கூடியதாக உரை - இனிய வார்த்தைகளையே பேசு.

18. இடம்பட வீடெடேல்

இடம்பட - தேவைக்கு மேல் அதிக பரப்பளவு கொண்டதாக : வீடுஎடேல் வீடு கட்டாதே. (அயலிலுள்ளவர்களின் வீட்டைப் பாதிக்கக்கூடிய திக்குகளில் வீடு கட்டாதே என்றும் பொருள் கூறலாம்)

19. இணக்கம் அறிந்து இணங்கு

இணக்கம் அறிந்து - நட்புக் கொள்ளுவதற்கு வேண்டிய இயல்புகள் ஒத்திருப்பதை அறிந்து : இணங்கு - நீ ஒருவரோடு நட்புக் கொள்.

20. தந்தை தாய் பேண்

தந்தை தாய் - பெற்றோரை: பேண் - போற்றிக் காப்பாற்று

21. நன்றி மறவேல்

நன்றி - பிறர் செய்த நல்லுதவியை மறவேல் - என்றும் மறவாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22.பருவத்தே பயிர் செய்

பருவத்தே - பொருத்தமான காலத்திலேயே : பயிர் செய் - அவ்வவ் பயிர் வகைகளை உற்பத்தி செய். (உரிய காலத்தில் செய்வதற்குரிய கடமைகளைச் செய்)

23. மன்று பறித்து உண்ணேல்

மன்றுபறிந்து - நீதிமன்றில் பொய்ச்சாட்சி கூறி : உண்ணேல் - அவ்வருவாயைக் கொண்டு வாழாதே.

24. இயல்பு அலாதன செயேல்

இயல்பு அல்லாதன - நல்லோரின் இயல்புக்கு மாறுபட்ட செயல்களை செய்யேல் செய்யாதே.

25. அரவம் ஆட்டேல்
அரவம் - பாம்போடு ஆ(ட்)டேல் - விளையாடாதே

26. இலவம் பஞ்சில் துயில்

இலவம் பஞ்சு பொதித்த மெத்தை, தலையணை நித்திரை செய்வதற்கு ஏற்றவையாகும்.

27. வஞ்சம் பேசேல்

பிறரை ஏமாற்றும் வஞ்சக வார்த்தைகளைப் பேசாதே.

28. அழகு அலாதன செயேல்
அழகு அ(ல்) லாதன - பிறர் கண்டு இகழும் படியான செயல்களை செ(ய்)யேல் செய்யாதே.

29. இளமையிற் கல்

கற்க வேண்டியவற்றைக் கல்விக்குரிய இளம் வயதிலேயே கற்றுக் கொள்.

30. அறனை மறவேல்
தருமத்தை (ஒருபோதும்) மறந்து விடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. அனந்தல் ஆடேல்

அனந்தல் - நித்திரையை : ஆடேல் -தூங்கவேண்டிய கால அளவுக்கு மேலே கொள்ளாதே.

32. கடிவது மற

கடியது - தீயவை என நல்லோரால் கடியப்படும் செயல்களை மற விட்டுவிடு

33. காப்பது விரதம்

காப்பது : பிற உயிர்களுக்கு எவ்வித தீங்கும் செய்யாது அவற்றைக் காப்பதுவே விரதம் - உண்மையான நோன்னு ஆகும்.

34. கிழமைப்பட வாழ்

கிழமைப்பட - பிறர் உன்னோடு விரும்பி நட்புக் கொள்ளதக்கவாறு வாழ் - நற்குண நற்செய்கைகள் உள்ளவனாக வாழ்வாயாக.

35. கீழ்மை அகற்று

கீழ்மை - தீயவனவற்றிலிருந்து அகற்று - நீங்கிக் கொள் (தீயகுணங்களை நீக்கு) தீயவரோடு சேராது விலகிக் கொள் என்றும் பொருள் கூறலாம்.

36. குணமது கைவிடேல்
குணமது - நற்குணங்களை : கைவிடேல் - (எந்தச் சூழ்நிலையிலும்) கைவிடாதே.

37. கூடிப்பிரியேல்

கூடி - நல்லவரோடு நட்புக் கொண்டால் : அந்நட்பை பிரியேல் - விட்டு விடாதே.

38. கெடுப்பது ஒழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுப்பது - பிறருக்கு எவ்வகையிலேனும் தீங்கு செய்வதை ஒழி - விட்டுவிடு.

## 39. கேள்வி முயல்

கேள்வி - கற்றுணர்ந்த பெரியோர் சொல்லும் நல்லுரைகளைக் கேட்டு முயல் அவ்வாறு நடக்க முயலுவாயாக.

## 40. கைவினை கரவேல்

கைவினை - உனக்குத் தெரிந்துள்ள வித்தைகளை : கரவேல் - மறைக்காமல் பிறருக்கும் கற்றுக்கொடு. (கைவினை - கைவந்த செயல்கள்)

## 41. கொள்ளை விரும்பேல்

பிறர் பொருளைக் கொள்ளையிட எண்ணாதே.

## 42. கோதாட்டொழி

கோது - குற்றமுள்ள ஆட்டு - விளையாட்டுக்களை (சூதாட்டம் போன்றவற்றை) ஒழி - விட்டொழிப்பாயாக.

## 43. கௌவை அகற்று

கௌவை - பிறரைப்பற்றிப் புறங்கூறும் தீய செயலை : அகற்று - நீங்குவாயாக (பிறருறும் துன்பம் துடைப்பாயாக) கௌவை - துன்பம்

## 44. சக்கர நெறிநில்

சக்கரம் (ஆக்ஞா சக்கரம்) அரச ஆணைக்குழு நெறிநில் - உட்பட்டு நட

## 45.சான்றோர் இனத்து இரு

சான்றோர் இனத்து - அறிவும் ஒழுக்கமும் உள்ள நல்லோருடன் இரு - கூடி வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. சித்திரம் பேசேல்

சித்திரம் - வாய்ச்சாதுரியமாக பேசேல் - இட்டுக் கட்டிப் பேசாதே

47. சீர்மை மறவேல்

சீர்மை - நல்ல பண்புகளை மறவேல் - கைக் கொண்டு ஒழுகுவதை மறந்து விடாதே.

48. சுளிக்கச் சொல்லேல்

சுளிக்கச் - கேட்பவர் மனம் வருந்தி முகம் சுளிக்கும் படியாக சொல்லேல் - கடுஞ்சொற் கூறாதே.

49. சூது விரும்பேல்

சூதாட்டத்தை விரும்பாதே.

50. செய்வன திருந்தச் செய்

செய்வன. எக்கருமத்தைச் செய்யினும் திருந்தச் செய் - திருத்தமாகச் செய்துமுடி

51.சேரிடம் அறிந்து சேர்.

சேரிடம் - நட்புக் கொள்ளும் ஒருவரது தன்மைகளை அறிந்து சேர் - முன்னரே நன்கறிந்து அவரோடு நட்புக் கொள்.

52. சை எனத் திரியேல்

சை என - பிறர் உனது நடத்தையைக் கண்டு 'சீ' என இகழத்தக்கவாறு திரியேல் நடவாதே.

53. சொற் சோர்வு படேல்

சொல் - கூறிய பின் நினைந்து வருந்தத்தக்க வார்த்தைகளை சோர்வு படடேல் மறந்தும் கூறாதே.

54. சோம்பித் திரியேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்பேறியாக வாழாதே

**55. தக்கோன் எனத் திரி**

தக்கோன் என - தகுதிபடைத்தவன் என்று நல்லோன் புகழும்படியாக திரி - நடந்து கொள்.

**56. தானமது விரும்பு**

தானமது - உன்னால் பிறருக்குக் கொடுக்கக்கூடிய கொடையை விரும்பு - விரும்பத்தோடு கொடு.

**57. திருமாலுக்கு அடிமை செய்**

திருமாலுக்கு - காக்கும் கடவுளாகிய கண்ணனை அடிமை செய் - வணங்கித் தொண்டுகள் புரி.

**58. தீவினை அகற்று**

தீவினை - பாவச் செயல்களைச் செய்வதை அகற்று - நீக்கிவிடு

**59. துன்பத்திற்கு இடம் கொடேல்**

துன்பத்திற்கு - உள்ளத்தில் துயரை வளர்க்கக்கூடிய எச்செயல் நிகழினும் : இடம் கொடேல் - அதற்காக வருந்தாதே. (அதைத் தாங்கும் வலிமையைப் பெறுவாயாக)

**60. தூக்கி வினை செய்**

வினை தூக்கி - செய்யப் போகும் காரியத்தினைச் சீர்தூக்கிப் பார்த்து : செய் - (நல்ல பயன் தரக்கூடிய கருமங்களையே) மேற்கொள். (எண்ணித் துணிக கருமம்)

**61. தெய்வம் இகழேல்.**

தெய்வத்தைப் பழிக்காதே. (தெய்வத்தின் மேல் பழி சுமத்தாதே)

**62. தேசத்தோடு ஒத்து வாழ்**
தேசத்தோடு - நாட்டிலுள்ள நல்லவரோடு ஒத்துவாழ் - மாறுபடாது வாழ்வாயாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. தையல் சொற் கேளேல்

தையல் - (வஞ்சகமாகப் பேசும்) பெண்ணின் : சொற்கேளேல் - சொற்கேட்டு நடவாதே.

64. தொன்மை மறவேல்

தொன்மை - (நம்மினத்தின்) பண்டைய பெருமைகளை : மறவேல் - மறந்து விடாதே.
(மரபு போற்று)

65. தோற்பன தொடரேல்

தோற்பன - தோல்வியைத் தரக்கூடிய செயல்களில் : தொடரேல் - ஈடுபடாதே

66. நன்மை கடைப்பிடி

நன்மை - நல்லன என ஆன்றோர் கூறியுள்ள செயல்களை : கடைப்பிடி - கைக் கொண்டு ஒழுகு.

67. நாடு ஒப்பன செய்

நாடு - நாட்டிலுள்ள பெரியோர் : ஒப்பன செய் - ஒப்புக் கொள்ளக்கூடிய செயல்களையே செய்.

68. நிலையில் பிரியேல்

நிலையில் - பிறர் மதிப்பில் உயர்ந்து நிற்கும் நிலையில் இருந்து பிரியேல் - தாழ்ந்து விடாதே. (கொண்ட குறிக்கோளைக் கைவிடாதே எனவும் கூறலாம்)

69. நீர் விளையாடேல்

நீர் - உயிராபத்துத் தரக்கூடிய ஆழமான நீர்நிலையில் : விளையாடேல் - நீந்தி விளையாடாதே.

70. நுண்மை நுகரேல்

நுண்மை - கொஞ்சம் தானே என எண்ணிச் சிற்றுண்டி வகைகளை நுகரேல் - அடிக்கடி உண்ணாதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. நூல் பல கல்

நூல் பல - அறிவு நூல்கள் பலவற்றையும் : கல் - தேடிக் கற்றுக்கொள்

72. நெற்பயிர் விளை

நெற்பயிர் - தமக்கும் பிறர்க்கும் உணவு தரும் நெற்பயிரை : விளை - விளைவித்தல் வேண்டும்.

73. நேர்பட ஒழுகு

நேர்பட - நேர்மையாக இயல்பு உள்ளவனாக : ஒழுகு - நடந்துகொள்

74. நைவினை நணுகேல்

நைவினை - செய்துவிட்டு உள்ளம் வருந்தும்படியான செயல்களில் : நணுகேல் - பங்கு பற்றாதே. நைதல் - வருந்துதல்

75. நொய்ய உரையேல்

நொய்ய - பயனற்ற வார்த்தைகளை: உரையேல் - கூறாதே.

76. நோய்க்கு இடங் கொடேல்

நோய்க்கு - நோய் தொற்றிக் கொள்ளுவதற்கு : இடங்கொடேல் - இடம் கொடாதே
(பரிகாரங்களை முன்னரே தேடிக் கொள்)

77. பழிப்பன பகரேல்

(கூறுவது கேட்டுப் பிறர்) - பழிக்கக் கூடிய வார்த்தைகளை : பகரேல் கூறாதே.

78. பாம்பொடு பழகேல்

பாம்போடு உறவு கொள்ளாதே (விடப்பாம்பு போன்ற தீயவரோடு பழகாதே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79. பிழைபடச் சொல்லேல்

பிழைப்பட - பிறர் குற்றம் காணக்கூடியதான வார்த்தைகளை சொல்லேல் - கூறாதே (ஆராய்ந்து பேசு)

80. பீடு பெற நில்

பீடு - பெருமை : பெறநில் - உண்டாகும்படி நடந்து கொள்.

81. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்

புகழ்ந்தாரை- பிறரால் நல்லோர் எனப் புகழப்படுபவரது நற்குணங்களை அறிந்து போற்றிவாழ் - அவற்றை நீயும் கைக்கொண்டு ஒழுகு. (உனது என்னென்ன தன்மைகள் பிறரால் புகழப்படுகின்றனவோ, அவ்வொழுக்கங்களைக் கைவிடாது ஒழுகுவாயாக)

82. பூமி திருத்தி உண்

பூமி திருத்தி - மண்ணைப் பண்படுத்தும் உழவுத் தொழிலை மேற்கொண்டு : உண் - அதன் பயனை நுகர்ந்து வாழ்வாயாக.

83. பெரியோரை துணைக் கொள்

பெரியாரை - அறிவாற்றல் மிக்க நல்லோரை : துணைக்கொள் - உறுதுணையாகக் கொண்டு வாழ்.

84. பேதைமை அகற்று

பேதைமை - உனது அறியாமையை : அகற்று - (கல்வி, கேள்விகள் மூலம்) நீக்கிக்கொள்.

85. பையலொடு இணங்கேல்

பையலொடு - அறிவற்ற சிறுவர்களோடு: இணங்கேல் - நட்புக் கொள்ளாதே
(சிற்றினம் சேரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**86. பொருள்தனைப் போற்றி வாழ்**
பொருள்தனை - தேடிய செல்வத்தை (புதைத்து வைக்காது) போற்றி எவ்வெவ் அறவழிகளிற் செலவிடப்பட வேண்டுமோ அவ்வழிகளை அறிந்து கடைப்பிடித்து ஒழுகி : வாழ் - வாழ்வாயாக.

**87. போர்த் தொழில் புரியேல்**

போர்த் தொழில் - (சமூகத்தில் வாழ்வாரோடு) வீண்சண்டை புரியேல் - செய்யாதே (சமாதான வாழ்வே சிறந்தது)

**88. மனம் தடுமாறேல்**
மனம் - உள்ளமானது தடுமாறேல் - கலங்காது திடமாக எக்கருமத்தையும் செய்வாயாக.

**89. மாற்றானுக்கு இடங்கொடேல்**
மாற்றானுக்கு - உனது பகைவனுக்கு இடங்கொடேல் - அவன் உனக்கு அழிவு செய்யக்கூடிய சந்தர்ப்பத்தைக் கொடுக்காதே.

**90. மிகைப்படச் சொல்லேல்**
மிகைப்பட - உண்மைக்கு மாறாக எதையும் அதிகப்படுத்தி சொல்லேல் - பேசாதே

**91. மீதூண் விரும்பேல்**
மீதூண் - அளவுக்கு அதிகமான உணவை : விரும்பேல் - உட்கொள்ள ஆசை கொள்ளாதே.

**92. முனை முகத்து நில்லேல்**
முனைமுகத்து - வீண் சச்சரவுகள் நடக்கும் இடத்தில் : நில்லேல் - நிற்காதே.

**93. மூர்க்கரோடு இணங்கேல்**
மூர்க்கரோடு - தீயவரோடு : இணங்கேல் - உறவு கொள்ளாதே.

**94. மெல்லின் நல்லாள் தோள் சேர்**
மெல்லின் நல்லாள் - மென்மையான நற்பண்புகள் அமைந்தவளை : தோள் சேர் மனையாளாகப் பெற்று இல்லறம் நடத்து.

**95. மேல் மக்கள் சொல் கேள்.**
மேல் மக்கள் - சுற்றறிந்த நல்லோரது : சொல் கேள் - அறிவுரை கேட்டு அதன்படி நட.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. மை விழியார் மனை அகல்.
மைவிழியார் - காமமூட்டும் மைதீட்டிய விழிகளையுடைய வேசியரது : மனை அகல் வீட்டை நெருங்காதே.

97. மொழிவது அறமொழி
மொழிவது - எத்தனையும் கூறும்போது : அறமொழி - சந்தேகத்திற்கு இடமின்றித் திட்ட வட்டமாகக் கூறு

98. மோகத்தை முனி
மோகத்தை - தவறான இச்சைகளை : முனி - வெறுத்து ஒதுக்கு

99. வல்லமை பேசேல்
வல்லமை - உன்னுடைய ஆற்றலைப்பற்றி : பேசேல் - (தேவையற்ற இடத்தில் ) நீயே புகழ்ந்து பேசாதே.

100. வாதுமுன் கூறேல்
முன் - பெரியோர் முன்னிலையில் : வாது - வீணாண விதண்டா வாதங்களை கூறேல் - கூறாதே.

101. வித்தை விரும்பு
வித்தை - பல்வேறு கலைகளையும் : விரும்பு - ஆசையோடு கற்றுக்கொள்

102. வீடு பெற நில்
வீடுபெற - வீடுபேற்றை (முத்தியை) அடைவிக்கக்கூடிய வழிகளை அறிந்து : நில் அவ்வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகு.

103. உத்தமனாய் இரு
உத்தமனாய் - சொல்லும் நினைவும், செயலும் தூயவனாய் இரு - வாழ்வாயாக.

104. ஊருடன் கூடிவாழ்
ஊருடன் - ஊர்மக்களுடன் : கூடிவாழ் - ஒன்றுபட்டு இணங்கி வாழ்

105. வெட்டெனப் பேசேல்
வெட்டு என - வாளால் வெட்டுவது போன்ற துன்பந்தரும் கடுஞ் சொற்களை : பேசேல் - பேசாதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106. வேண்டி வினை செயேல்.
வேண்டி - பிறருக்குக் கேடுசூழ வேண்டும் என எண்ணி : வினை செ(ய்)யேல் தீவினை செய்யாதே.

107. வைகறைத் துயில் எழு
வைகறை - அதிகாலையில் : துயில் எழு - நித்திரை விட்டெழும்பு

108. ஒன்னாரைச் சேரேல்
ஒன்னாரை - பகைவர்களோடு : சேரேல் - எக்காரணங்கொண்டும் சேருதல் வேண்டாம்.

109. ஓரம் சொல்லேல்
ஓரம் - நடுவுநிலை தவறி ஒருபக்கம் சார்ந்து : சொல்லேல் - பொய்ச்சாட்சி சொல்லாதே.

# கொன்றை வேந்தன்

## காப்பு

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே

கொன்றைவேந்தன் - கொன்றைப்பூமாலையைச் சூடிய சிவபெருமானது :செல்வன் அடி இணை - திருக்குமாரராகிய விநாயகக் கடவுளது இருபாதங்களையும் : என்றும் ஏத்தி யாம் தொழுவோம் - எப்பொழுதும் போற்றி யாம் வணங்குவோம்.

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
தாயும் - தந்தையும் யாம் முதலில் அறிந்து வணங்குதற்குரிய தெய்வங்களாவர்.

2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று
திருக்கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்வது பெரும்பயன் தரும். ஆலயம் கோயில் : சால - மிக.

3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று
திருமணம் செய்து மனைவியோடு கூடி இல்லத்தின்கண் இருந்து அறங்களைச் செய்வதற்குரிய இல்லறமே சிறந்த அறநெறியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
கொடுக்காத உலோபிகளின் செல்வம் கள்வர் போன்ற கொடியவர்களால் அபகரிக்கப்படும்.
தேட்டம் - தேடிவைத்திருக்கும் செல்வம்

5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
அளவுக்கு அதிகமாக உண்ணாது விடுதல் பெண்களின் உடலழகைப் பேணும் வழி

6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
ஊரிலுள்ளார் பலரோடும் பகை கொள்ளும் ஒருவன் குலத்துடன் அழிய நேரிடும்.

7. எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்
கணிதநூலும் இலக்கணநூலும் மக்களுக்கு கண்கள் எனத்தக்கவை.

8. ஏவா மக்கள் மூவாமருந்து
பெற்றோர்கள் கட்டளையிடாமல் தாமே உணர்ந்து வேண்டிய பணிகளைச் செய்யும் பிள்ளைகள் சாவா மருந்தாகிய அமுதத்துக்கு ஒப்பாவர்.

9. ஐயம் புகினும் செய்வன செய்
செய்யப்பட வேண்டிய நல்ல கடமைகளைப் பிச்சை எடுக்கும் நிலைவந்தாலும் தவறாது செய்தல் வேண்டும்.

10. ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு
பெண்ணானவள் கணவனாக ஒருவனை அடைந்து அவனது உள்ளத்தில் இடம் பெற்று வாழ வேண்டும். (ஒருவன் என்பதற்கு இறைவன் என்றும் பொருள் கூறலாம்)

11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
வேதங்களை ஓதி உணர்ந்தவர்களாய் இருப்பதைக் காட்டிலும், நல்லொழுக்கம் உடையவர்களாய் வாழ்வதே அந்தணர்களுக்கு அதிக பெருமை தரும்.

12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு
பொறாமை கொண்டு பிறரைப்பற்றித் தவறான வார்த்தைகளைப் பேசுதல் ஒருவனுடைய செல்வத்தை அழித்துவிடும்.
ஔவியம் - பொறாமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு**
தானியங்களையும் பணத்தையும் வீண்செலவு செய்யாது தேடிக்கொள்
அஃகம் - தானியம் : சிக்கென - இறுக்கமாக - வீண்செலவு செய்யாது சிக்கனமாக வாழ்ந்து.

**14. கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை**
கணவன் சொல்லைத் தட்டாமல் கற்பு ஆகும்.
திறம்புதல் - வழுவுதல்

**15. காவல் தானே பாவையர்க்கு அழகு**
தமது கற்பைக் காப்பாற்றிக் கொள்வதே பெண்ணுக்குப் பெருமைதரும் செயலாகும்.

**16. கிட்டாது ஆயின் வெட்டென மற**
முயன்றும் எண்ணியதொன்றை அடைய முடியாது அதனை உடனேயே மறந்துவிடு

**17. கீழோர் ஆயினும் தாழ உரை**
கேட்பவர் உன்னிலும் தாழ்ந்தவரானாலும் பணிவோடு பேசு.

**18. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை**
எல்லோரிடத்திலும் குறைகாணப்புகின் அவனை விட்டுச் சுற்றத்தார் அகன்று விடுவர்.

**19. கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்**
கூரிய அறிவு படைத்திருந்தாலும் வீண்பெருமை பேசாதே.

**20. கெடுவது செய்யின் விடுவது கருமம்**
தன்னோடு தொடர்பு பூண்டோர் தீய கருமங்களைச் செய்வதை அறிந்தால் அவர்கள் தொடர்பை விலக்கி விடுவதே செய்யத்தக்க செயலாகும்.

**21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை**
வறுமையுற்ற போதும் மனந்தளராமல் முயற்சிப்பவனிடம் செல்வம் தானே வந்து சேரும்.

**22. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி**
ஒருவன் தேடி வைத்திருக்கும் பொருட் செல்வத்திலும் பார்க்க அழிவற்ற உண்மையான செல்வம் கல்விச் செல்வமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி
அரசனோடு அல்லது அரச அதிகாரிகளோடு கொள்ளும் அறிமுகம் நமக்கு ஒரு தீமை சம்பவிக்கும்போது உதவியாக இருக்கும்.

24. கோட் செவிக்குறளை காற்றுடன் நெருப்பு
கோள் செவி - பிறர்மீது கோள்களைக் கேட்டுப் பழகிய செவியில் குறளை - மேலும் ஒருவன் வந்து கூறும் கோளானது : காற்றுடன் நெருப்பு காற்றுடன் சேர்ந்த தீ பரவுவதுபோல் விரைவாகப் பரவும். தீமையும் செய்யும்.

25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை
பிறர்மேல் பழிச்சொற்களை ஒருவன் கூறிவருவானாயின் அவன் எல்லோரது பகைக்கும் ஆளாவான்.
கௌவை - பழிச்சொல் - துன்பம்

26. சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை
குழந்தைப் பேறு இல்லாது போகாது : மக்கட் செல்வம் பெற்று விளங்குதல் சந்ததிக்குச் சிறப்பைத்தரும்.
வந்தி - மலட்டுத்தன்மை

27. சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு
தமது மக்கள் அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்கள் எனப் பிறரால் பாராட்டப்படுவது பெற்றோர்க்குப் பெருஞ் சிறப்பைத் தரும்.

28. சிவத்தைப் பேணின் தவத்திற்கு அழகு
சிவபெருமானை அன்போடு தியானிப்பது தவம் புரிவோருக்குப் பெரும் பயன் தரும்.

29. சீரைத் தேடின் ஏரைத்தேடு
சிறப்புப்பெற விரும்பின் பயிர்த்தொழிலை மேற்கொள்
சீர் - சிறப்பு : ஏர் - கலப்பை

30. சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்
சுற்றத்தார் தன்னை என்றும் நெருங்கி இருக்கக்கூடியதாக வாழ்தலே சுற்றம் என்ற சொல்லுக்குப் பொருளாகும்.
சுற்றம் - சுற்றியிருப்போர்.

31. சூதும் வாதும் வேதனை செய்யும்
சூதாட்டமும் பெரியோருடன் வீண் தர்க்கம் செய்வதும் துன்பத்தைக் கொண்டு வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**32. செய்தவம் மறந்தால் கைதவம் மாளும்**

ஒருவன் தவமாகப் பேணித் தான் செய்யும் பணியில் தவறுவானானால் கைப்பொருளையும் இழக்க நேரிடும்.

செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும் என்றும் பாடபேதம் உண்டு. இதற்கு "செய்யும் தவத்தை மறந்தால் பொய்ம்மை அவனை ஆட்கொள்ளும்" என்பது பொருள்.

கைதவம் - கைப்பொருள், பொய்ம்மை

**33. சேமம் புகினும் சாமத்து உறங்கு**

சேமம் புகினும் - பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டாலும் சாமத்து உறங்கு - ஒரு சாம நேரமாவது தூங்குதல் வேண்டும். (உறங்காது கண்விழித்தால் உடல் நலம் கெடும்)

**34. சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண்**

வருவாய் குறைவின்றி இருக்கும்போது ஏழைகளுக்கும் கொடுத்து நீயும் அனுபவி.

**35. சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்**

சொக்கர் என்பவர் - பொன்படைத்தோர் எனப்படுவோர் : அத்தம் பெறுவர் - அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றனுள் ஏனையவாகிய அறத்தையும் இன்பத்தையும் (அப்பொன்னின் உதவியால்) பெறுவர்.

சொக்கம் - பொன் (சொக்கத் தங்கம் என்பது காண்க) : அத்தம் - பொருள்

**36. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.**

சோம்பேறிகளாய் உள்ளோர் வருந்தி அலைவர்.

**37. தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை.**

தந்தை கூறிய சொல்லைப் பேணுதல், மந்திரங்கள் தரும் பயனிலும் கூடிய பயனைத் தரும். தந்தையின் அறிவுரையைத் தட்டாதே)

**38. தாயின் சிறந்தொரு கோயிலும் இல்லை**

கோயிலில் எழுந்தருளியிருக்கும் தெய்வத்திலும் பார்க்கக் கண்கண்ட தெய்வமாகிய தாயே சிறந்த தெய்வமாவாள். (தாயை வழிபடு)

**39. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு**

திரைகளோடு கூடிய கடலைக் கடந்து வேறு நாடு சென்றேனும் பொருளைச் சம்பாதிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**40. தீராக் கோபம் போராய் முடியும்**
அடங்காத கோபம் சண்டைகளைக் கொண்டுவரும் : அழிவு தரும்.

**41. துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு**
கணவனுக்கு வேண்டியவற்றைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இல்லாத மனைவி மடியிலே கட்டிக் கொண்ட நெருப்புக்குச் சமமாவாள்.

**42. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்.**
கணவரின் குறைபாடுகளைப் பிறரிடம் எடுத்துரைக்கும் மனைவி யமனுக்குச் சமமாவாள்.
கூற்று - யமன்.

**43. தெய்வம் சீறில் கைதவம் மாளும்**
தெய்வத்தின் கோபத்துக்கு ஒருவன் ஆளானால் அவன் செய்திருந்த தவமும் அழிந்துபடும்.

**44. தேடாது அழிக்கின் பாடா முடியும்**
பொருளைச் சம்பாதிக்காது கையில் உள்ள பொருளை ஒருவன் செலவிடுவானேயானால் ஈற்றில் வருந்த நேரிடும்.

**45. தையும் மாசியும் வை அகத்து உறங்கு**
தையும் மாசியும் கடும்பனிக்காலமாதலின் அக்காலத்திர் வைக்கோலால் வேய்ந்த விட்டில் நித்திரை செய்தல் நன்று.
வை - வைக்கோல் : அகம் - வீடு

**46. தொழுது ஊன் சுவையின் உழுது ஊன் இனிது**
ஒருவருக்குக் கீழ்ப்பட்டுப் பணிபுரிந்து வரும் வருமானத்தில் பெறும் உணவினும், உழவுத் தொழில் புரிந்து பெறும் உணவு இனியதாகும்.

**47. தோழனோடும் ஏழைமை பேசேல்**
நண்பனோடு கூடப் பயனற்ற வார்த்தைகளைப் பேசாதே. (நண்பனுக்கும் உன்னுடைய வறுமை நிலையை எடுத்துக்கூறாதே என்றும் பொருள் கொள்ளலாம்)

**48. நல்லிணக்கம் அல்லது அல்லல்படுத்தும்**
கூடாத நட்புத் தொல்லைகளைத் தரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**49. நாடெங்கும் வாழக்கேடு ஒன்றும் இல்லை**
நாட்டுமக்கள் யாவரும் மகிழ்ச்சியாக வாழ்வார்களேயானால் கேடு என்பது எவர்க்கும் இல்லையாகும்.

**50. நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை**
சொன்ன சொல் தவறாமை, கற்றவண்ணம் ஒழுகதலில் மிக உணர்ந்த பண்பாகும்.
திறம்புதல் - வழுவுதல், தவறுதல்

**51. நீரகம் பொருந்திய ஊர் அகத்து இரு**
நீர்வளம் கொண்ட ஊரிலே வாழ்

**52. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி**
மிகச் சிறிய செயலேயாயினும் நன்கு ஆராய்ந்து பார்த்தே அதனைச் செய்யத் துணிதல் வேண்டும்.

**53. நூல் முறை தெரிந்து சீலத்து ஒழுகு**
நீதி நூல்கள் கூறும் நல்ல நெறிகளைக் கற்றறிந்து ஒழுக்கத்துடன் வாழ்க

**54. நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை**
மனச்சாட்சிக்குத் தெரியாது எந்த வஞ்சகமும் செய்ய முடியாது.

**55. நேரா நோன்பு சீர் ஆகாது**
மனத்தோடு பொருந்தாத விரதங்கள் நற்பலனைத் தரமாட்டாது.

**56. நைபவர் எனினும் நொய்ய உரையேல்**
(கேட்பவர் எதிர்த்து உரையாடாது) வருந்துபவரே ஆயினும் அவருடைய உள்ளத்தைப் புண்படுத்தக்கூடிய வார்த்தைகளைக் கூறாதே.

**57. நொய்பவர் என்பவர் வெய்யவர் ஆவர்**
இளகிய மென்மையான மனத்தையுடையவர்கள் எல்லோராலும் விரும்பப்படத்தக்கவர்கள் ஆவர்.

**58. நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை**
உயிர்களைக் கொன்று தின்னாது இருப்பதுவே தலை சிறந்த விரதமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்
ஒருவன் உற்பத்தி செய்யும் பயிரின் விளைவு அவனது நல்வினைப் பயனின் அளவைக் காட்டிவிடும்.

60. பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்.
பாற்சோறே ஆனாலும் உரிய வேளையிலேயே உணவை உட்கொள்ளுதல் வேண்டும்.
(காலந்தவறி உண்ணாதே)

61. பிறன் மனை புகாமை அறன் எனத்தகும்
அயலான் மனைவியைச் சேர எண்ணி அவனுடைய இல்லத்திற்குச் செல்லாதிருப்பது சிறந்த அறமாகும்.

62. பீரம் பேணில் பாரந்தாங்கும்
தாய்ப்பால் குடித்து வளர்ந்தவன் (உடல்வலு பெறுவான் ஆதலின்) எந்தப் பாரத்தையும் தூக்க வல்லவனாவான் . (பீரம் - முலைப்பால்

63. புலையம் கொலையும் களவுந் தவிர்
புலால் உணவு உண்பதையும், உயிர்களைக் கொல்வதையும், திருடுவதையும் செய்யாதே.

64. பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்
கீழ் மக்களிடம் நல்லொழுக்கம் இல்லையாகும்.
பூரியோர் - தீயவர்கள் : சீரிய - சிறந்த

65. பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும்
(ஞானமுதிர்ச்சி) பெற்ற துறவிகள் (பற்று அறுத்தவர்கள் ஆதலின்) சுற்றம் என எவரையும் நினையார் கோபமும் கொள்ளார்.

66. பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்
அறிந்தும் அறியார் போல் அடங்கியிருக்கும் மடம் என்னும் குணம், பெண்களுக்குச் சிறப்புத்தரும் அணிகலம் ஆகும்.

67. பையச் சென்றால் வையம் தாங்கும்
எதையும் அவசரப்படாது அமைதியாகச் செய்பவரை உலகத்தவர் மதிப்பர்.
வையம் - பூமி - பூமியில் உள்ளோர்

68. பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்
தீமை என்று கருதப்படும் செயல்கள் யாவற்றையும் நீக்கிவிடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. போகனம் என்பது தான் உழுந்து உண்டல்
தான் வருந்திப் பாடுபட்டு உழைத்து உண்ணும் உணவே உண்மையான உணவாகும்.
போனகம் - போசனம் - உணவு - உழத்தல் - வருந்துதல்.

70. மருந்தே ஆயினும் விருந்தோடு உண்
(உண்ணுவதற்குக் கிடைத்தது பெறுதற்கு அரிய) அமுதமே ஆனாலும் பங்கிட்டு விருந்தினர்க்கும் கொடுத்து உண்.
மருந்து - சாவாமருந்து - அமுதம்

71. மாரி அல்லது காரியம் இல்லை
மழை பெய்யாது விடுமாயின் உலகில் எந்தக் காரியமும் நடைபெறமாட்டாது.

72. மின்னுக்கு எல்லாம் பின்னுக்கு மழை
மின்னல்கள் தோன்றுவது மழைவரப் போவதற்கு அறிகுறியாகும்.

73. மீகாமன் இல்லா மரப்பலம் ஓடாது
கப்பல் ஓட்டி இல்லாவிட்டால் கப்பல் ஓடமாட்டாது.(அதுபோன்று உலக நிகழ்ச்சிகள் யாவற்றையும் இறைவனே நடத்துகின்றான். அவன இன்றி ஓர் அணுவும் அசையாது)
மீ - மேலிடம் : மீனாமன் - கப்பல் தலைவன் : மரக்கலம் - கப்பல்.

74. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
காலையில் நாம் ஒருவனுக்குத் தீமையோ நன்மையோ செய்தால் அதற்காக தீமையோ நன்மையோ மாலையில் நம்மை வந்தடையும்.

75. மூத்தோர் சொல்லும் வார்த்தைர அமிர்தம்
அறிவால் முதிர்ந்த பெரியோர் கூறும் அறிவுரைகள் அமுதம் போல நம்மைக் காப்பாற்றும்.

76. மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு
பஞ்சு மெத்தையில் படுத்தல் சுகமாக நித்திரை கொள்ளலாம்.

77. மேழிச் செல்வம் கோழை படாது
உழவுத் தொழிலால் ஈட்டும் செல்வம் மிக உயர்ந்ததாகும்.
மேழி - கலப்பை : கோழைபடுதல் - கேவலமாகக் கருதப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. மைவிழியார்தம் மனை அகன்று ஒழுகு
கண்ணுக்கு மைதீட்டிக் காமவலை வீசும் தாசிகளது வீட்டை அடையாதே.
(ஒழுக்கமாக வாழ்)

79. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
பெரியோர் கூறும் அறிவுரைகளைக் கேட்டு நடவாதுவிடின் அழிவடைவது நிச்சயமாகும்.

80. மோனம் என்பது ஞானவரம்பு
மௌன நிலையில் தியானம் செய்வதே ஞான நிலையின் உச்ச எல்லையாகும்.
மோனம் - மௌனம் - பேசாதிருத்தல்.

81. வளவன் ஆயினும் அளவறிந்து அளித்து உண்
அரசனே ஆனாலும் தன்னிடமுள்ள பொருளின் அளவை அறிந்து அதற்கமையவே ஏழைகளுக்குக் கொடுத்து தானும் அனுபவிக்க வேண்டும் (அன்றேல் பொருளின்றி வருந்த நேரிடும்)

வளவன் ஆயினும் அளவறிந்து அழித்து உண் எனவும் பாடபேதம் உண்டு
அழித்து உண் என்பதற்குச் செலவிட்டு வாழ் எனப்பொருள் கூறலாம்.

82. வானம் சுருங்கில் தானம் சுருங்கும்
மழை குறைந்து விடுமாயின் உலகில் தான தருமங்களும் குறைந்து விடும்
வானம் - மழை தானம் - கொடை

83. விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்
விருந்தினரை உபசரிக்காதவர் இல்லறத்திற்கு உரிய ஒழுக்கம் அற்றவர் ஆவர்

84. வீரன் கேண்மை கூர் அம்பாகும்
உடல்வலு, உளவலு படைத்தவனுடன் கொள்ளும் நட்பானது கூரிய அம்பு போன்று பகைவரை அழிக்கும்.

85. உரவோர் என்கை இரவாது இருத்தல்
எத்தகைய கொடிய வறுமை வந்தபோதும் பிறரிடம் இரந்து செல்லாது வாழ்பவரே மனத்திண்மை படைத்தவராவார்.
உரம் - வலிமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு
ஊக்கத்துடன் உழைப்பவனிடம் செல்வம் சிறந்து விளங்கும்.

87. வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை
தூய்மையான உள்ளம் உடையவர்களுடைய மனத்தில் கபட எண்ணம் தோற்றாது.
வெள்ளை - தூய்மை

88. வேந்தன் சீறின் ஆம்துணை இல்லை
அரசனுடைய கோபத்துக்கு ஆளானவரைக் காப்பாற்ற எவரும் துணை செல்லார்.

89. வையம் தோறும் தெய்வம் தொழு
எந்தத் தேசத்திற்குச் சென்றாலும் மறவாமல் கடவுளை வணங்கு
வையம் - பூமி - தேசம்
" வைகல் தோறும் தெய்வந் தொழு" என்றும் பாடபேதம் உண்டு
" காலையில் எழுந்து கடவுளைத்துதிவரை
என்பது பொருள்.
வைகல் - வைகறை - அதிகாலை

90. ஒத்த இடத்து நித்திரை கொள்
குன்று குழி இல்லாத சமமான இடத்தில் நித்திரை செய்வது உடலுக்குக் கூடிய ஆறுதல் தரும்.

91. ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்
அறிவு நூல்களைக் கல்லாதவர் நல்லறிவு பெறார். ஆதலின் கற்றவண்ணம் ஒழுகவும் மாட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் மேம்பட

- நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்

- அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை விடுங்கள் (Loose Yalk).

- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள். (Diplomacy)

- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் (Adamant Argument) குறுகிய மனப்பாங்கை விட்டொழியுங்கள்

- உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carrying Tales)

- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். (Superiority Compelex)

- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் எதிர்பார்க்காதீர்கள். (Over - Expectation)

- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சந்தர்ப்பம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் பெரிதுபடுத்தாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில சைவக் கிரியை விளக்கம்

| | | |
|---|---|---|
| பிராணாயாமனம் | : | பிராணவாயுவை அடக்குவதனால் மனத்தை ஒரு வழிப்படுத்தி திருவருளில் நிறத்துதல். |
| பிராண + ஆயாமம் | : | பிராண வாயுவை அடக்குதல் |
| பவித்திரமணிதல் | : | மோதிரம் போலத் தர்ப்பையினால் செய்யப்பட்டு அணிவிரலில் அணிவது. |
| சங்கற்பம் | : | சங்கற்பமாவது செய்யப்போகும் கிரியையிலே மனத்தைப் பதித்து நிறுத்தல். |
| சகளீகரணம் | : | சரீரத்தை சிவரூபமாக்குதல் |
| சகளம் | : | சரீரம் |
| கரணம் | : | செய்தல். சிவ வடிவத்திற்குரிய சிவ மந்திரங்களை எமது சரீரத்தால் பதித்பால் சிவவடிவமுண்டாகும். |
| கும்பம் வைத்தல் | : | கடவுளை லிங்கம் முதலியவற்றிலே வழிபடுதல் போலக் கும்பத்திலும் வழிபடலாம். |

கும்பம் உடம்பின் பாவனை : அதில் சுற்றிய சீலை - தோல், நூல் - நாடிகள், குடம் - தசை, தண்ணீர் - இரத்தம், இடப்படும் இரத்தினம் - எலும்பு, தேங்காய் - தலை, மாவிலை - தலைமயிர், தர்ப்பை - குடுமி, அதில் பதிக்கப்படும் மந்திரம் உயிர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு

1958
♦
07
♦
07



உதிர்வு

2015
♦
08
♦
18

அமரர் அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

(பிறவுன் கொம்பனியடி, வவுனியா)

(கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திரு. அ.கேதீஸ்வரன் அவர்களின் அன்புச் சகோதரன்)

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்க்கும்
உற்றார் உறவினர்க்கும்
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

திட்டமிடல் பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும்,
மாவட்ட திட்டமிடல் செயலகம்,
மாவட்ட செயலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
07
07
1958

இறப்பு
18
08
2015

நெடுந்தீவு, கிழக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட
(பொருண்மியமும் கண்ட பேரறிவாளன்)

## அமரர்.அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

சிரித்த முகமும் சிந்திக்க வைக்கும்
சிறந்த குணமும்
எம் கண்முன் நிக்குதையா
துடுப்பிளந்த படகதுவாய்–உங்கள்
உறவுகள் நிலைதடுமாறி
ஆறவே ஆறாது எம் துயர் – என்றெண்ணி
கதறியழ எங்கு சென்றீர்கள்
காற்றோடு வந்த உங்கள் பிரிவுச் செய்தி
கனவாகிப் போகாதோ ?
உங்கள் வடுவிலா வார்த்தைகளில் ஒளிரும்
பாசமுகம் காண்போமோ!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

**ஜெயக்குமார் (குமார்) குடும்பம்**

2ம் யுனிற், முரசுமோட்டை, பரந்தன்.

தீபன் அச்சகம் - இல.18, யாழ் வீதி, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

**பிறப்பு**
07
07
1958



**இறப்பு**
18
08
2015

நெடுந்தீவு, கிழக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட

## அமரர்.அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

எங்கள் இதயக் கோவிலில் அகல்
விளக்காய் எரிந்த - மைத்துனரே!
நீங்கள் அனைந்து போனதால் - எங்கள்
இதயத்தில் வேதனை விளக்கு - தூண்டப்பட்டு
இதயம் வெறித்தனமாய் வலிக்கின்றது
பட்டாம் பூச்சியாய் பல விதமாய்
எம்மை வட்டமிட்டு வந்த அருமை - மைத்துனரே!
உங்களைத்தேடி ஏங்கிடும் - உங்கள்
உறவுக்கு நீங்கள் என்ன பதில் சொல்கின்றீர்கள்
எங்கள் மைத்துனரே!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

**மைத்துனன் – விஜயகுமாரன் குடும்பம்**
இல.100, யாழ் வீதி, வவுனியா.

தீபன் அச்சகம் - இல.18. யாழ் வீதி. வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு

07
07
1958

இறப்பு

18
08
2015

நெடுந்தீவு, கிழக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட

## அமரர்.அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

இனி உங்களை நேரிலே காண்பதென்பது முடியாதா மாமா!
நினைவிலும் கனவிலும் விழிமூடி அழைக்கின்றேன் வருவீர்களோ மாமா!
தனிமையில் தனிக்கவிட்டு நீங்கள் மட்டும் போவதுதான்
எவ்விதத்தில் நியாயம் மாமா!
காலத்தால் அழியாத கவலைக்குள் மூழ்கடித்துவிட்டீர்களே எம்மை...
இனி என்று தான் உங்களை பார்ப்போம்!
உங்கள் அன்பினை தவிர மீதமில்லை இங்கு
அதுதான் உங்களை வழி அனுப்ப விழி நனைத்து நிற்கின்றோம்
நாமெல்லாம் இன்று.
எப்போதும் அனைவருக்கும் இனியவர்தானே நீங்கள்
யார் மறுப்பார் இன்று.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

**மருமகன் – பிரதீபன் விணுஷா குடும்பம்**
பம்பலப்பிட்டி, கொழும்பு.

தீபன் அச்சகம் - இல.18, யாழ் வீதி, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



**பிறப்பு**

07
07
1958

**இறப்பு**

18
08
2015

நெடுந்தீவு, கிழக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட

## அமரர்.அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

**நேற்றுவரை நீங்கள் எம்மோடு – அது**
**நிஜமான வாழ்வு**
**கனவாகிப் போகாதோ – உங்கள்**
**கடந்துவிட்ட நாளிரண்டு**

**ஏனையா சோகம் தந்தீர்கள்**
**எமைவிட்டு ஏன் பிரிந்து சென்றீர்கள்**
**இங்கே நாம் ஏங்குகின்றோம்**
**இதயம் நிறை சுமைகளோடு**

**எங்கள் உயிரோடு கலந்தவரே – உங்களை**
**காலம் பூராகவும் சுமந்து நிற்போம்**
**எங்கள் இலட்சியத்தின் பங்காளனே**
**கானலாகிப் போகாது உங்கள் எண்ணங்கள்**

**உங்களை நேசிக்கின்றோம் – நாம்**
**உங்களை பூசிக்கின்றோம்**
**இப்போ எங்கள் கண்ணீரை – தருகின்றோம்**
**காணிக்கையாக...**

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**பிரிவால் துயருறும்**

மருமகன் - சிவதீபன் பிரதீபா குடும்பம்
லண்டன்

தீபன் அச்சகம் - இல.18. யாழ் வீதி, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

07
07
1958



இறப்பு

18
08
2015

நெடுந்தீவு, கிழக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட

# அமரர்.அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

பணிவுக்கு இலக்கணமாய்
பண்பிற்கு உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பழகிய நாட்கள் இதயத்தில் கண்ணீரிடுதையா
நீங்கள் நடந்த தடங்களிலே நீங்கள் இருந்த இடங்களிலே
பேசிய மொழிகளிலே - எம்
நினைவோடு நீங்கள் இருக்க சென்ற தூரம் எங்கே
புன்னகை மொழியும் - உங்கள்
பூமுகம் தான் எங்கே
மண்ணில் பிறப்பவர் மடிவது வழமைதான்
நீ மடிந்தாய் என்ற செய்தி மட்டும்
ஏற்கவும் கேட்கவும்
மீளாத் துயரில் கொள்ளும் உங்கள் பாதங்களில்
கண்ணீர்ப் பூக்களை காணிக்கை ஆக்குகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

**தவனேஸ்வரன் ஜெயதீபா குடும்பம்**


இல.100, யாழ் வீதி, வவுனியா.

தீபன் அச்சகம் - இல.18. யாழ் வீதி. வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 07 07 1958

இறப்பு 18 08 2015

நெடுந்தீவு. கிழக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட

## அமரர்.அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

மண்ணிலே பிறந்து வாழ்ந்தே – எம்
மனங்களில் நிறைந்து நின்றீர்கள்
கண்ணிலே கருவிழி போல நீங்கள்
கருத்திலே கலந்து வாழ்ந்தீர்கள்
பண்ணிய செயல்கள் எல்லாம் – நம்
மனதிலே பரவி விட்டு
விண்ணிலே மறைந்தீர்கள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

## நகுலேஸ்வரன் குடும்பம்

இல.36, குடியிருப்பு, வவுனியா.

தீபன் அச்சகம் – இல.18, யாழ் வீதி, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

பிறப்பு 07 07 1958



இறப்பு 18 08 2015

அமரர்

## திரு.அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

(எமது நண்பன் தினோசன் அவர்களின் அன்புத் தந்தையார்)

அன்புக்கும் பண்புக்கும்
இலக்கணமாய்த் வாழ்ந்தீர்!
ஆதரவு மொழிபேசி
இன்முகத்துடன் வாழ்ந்தீர்!
நாளும் பழகிய நாட்களை
கனவாய் நினைப்பதா?
எங்கள் கண்ணீரை
உங்கள் பாதங்களில்
காணிக்கையாய் அர்ப்பணித்து
அஞ்சலி செய்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
நண்பர்கள்
(V/C.C.T.M.S)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

07
07
1958



இறப்பு

18
08
2015

நெடுந்தீவு, கிழக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீட், வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட

## அமரர்.அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

அன்பின் உறைவிடமாய்
அனைவருக்கும் நிழல் மரமாய்
துன்பம் நீக்கும் அருமருந்தாய்
தூய வாழ்வு வாழ்ந்த ஐயாவே!
உங்களை இவ்வுலகம் ஏங்கியழ
அவ்வுலகம் செல்ல ஆசையுற்றது ஏனோ!
பூவுலகில் பொன்னெழுத்தாய்
நின்று நிலைத்திருக்கும் இறைவன்
நிழலில் நீங்கள் இருப்பீர்கள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

••பிரிவால் துயருறும்••

மைத்துனர் :— ஸ்ரீஸ்கந்தகுமாரன் குடும்பம்,
தரங்க துசிந்தா குடும்பம், றஜிந்தன்

தீபன் அச்சகம் - இல.18, யாழ் வீதி, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 07 | 18 |
| 07 | 08 |
| 1958 | 2015 |

நெடுந்தீவு, கிழக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வைரவபுளியங்குளம் வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட

## அமரர்.அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

எல்லோருக்கும் நல்லவராய்
இன்முகத்தோடும் புன்சிரிப்போடும்
அன்புடனும் பண்புடனும் பழகி
ஓர் நாளில் மறைந்த மாயமென்ன

காலத்தால் நாம் உம்மைப் பிரிந்தாலும்
ஞாலத்தால் எம்முயிர் உள்ளவரை
காயாத விழிநீரால் உங்கள் ஆத்ம
சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்


**பெறாமக்களும் மருமக்களும்**

தீபன் அச்சகம் - இல.18, யாழ் வீதி, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள்



பிறப்பு
07
07
1958

இறப்பு
18
08
2015

நெடுந்தீவு, கிழக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட

## அமரர்.அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

அழகாய் மலரும் உன் புன்னகை
ஆயிரம் அர்த்தம் சொல்லும் உன் வழிப்பேச்சு
அவ்வப்போது கிடைக்கும் உன் பாச வருடல்கள்
இத்தனையும் எதற்கும் ஈடாகாது-என்பதால் தானோ
மனது இன்னும் உன்னையே சுற்றி
வட்டமடிக்கிறது.........தினமும்...........

நாட்கள் பல கடந்தாலும் -உனது
நினைவு எமது விழிகளுக்குள் உறைந்து இருக்கும்
எதற்கும் அஞ்சாத எம் மனம்
உனது பிரிவால் பனிக்கட்டி போல் உருகி விடுகின்றது
நாட்கள் பல கடந்தாலும்
உன் நினைவு மட்டும் நீங்காது எம் மனதில்
எங்கள் மனதில் நீ இருப்பத போல்
எமனின் நண்பனாகவும் உள்ளாய் போலும்
ஏனெனில் உன்னுடன் குதுகலிப்பதற்காக தானோ
அழைத்தான் போலும் ....!
விடைதெரியாமல் துவண்டு போகிறோம்...

அன்னாரின் பிரிவினால் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

கந்தையா கணேசலிங்கம் குடும்பம்
தர்மநாயகம் பிரியசாந்த குடும்பம்
கவின் கலாலயம் – உருத்திரபுரம்.

தீபன் அச்சகம் - இல:-18.யாழ் வீதி(இலுப்பையடி).வவுனியா.T.P:-024 2226466



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

நெடுந்தீவு, கிழக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட

அமரர்.

## அமரசிங்கம் தர்மகுலசிங்கம்



பார்த்தவர் கண்ணுக்கு பளிச்சிடும் – உங்கள்
முகத்தோற்றமும் புன்சிரிப்பும்
உங்கள் தோற்றமும்
பாரினிலே உதித்தது இதற்குதானா?

கண் கெட்ட காலன்
உங்கள் உயிரைப் பறித்தான்
கதறியலும் உங்கள் உறவுகளுக்கு
ஆறுதலுக்கு வார்த்தையில்லை

உங்கள் பிரிவு எம்மை எல்லாம்
துயரத்தில் ஆழ்த்துதையா
எம்மை விட்டு கணப்பொழுதில் – எங்கே
சென்று விட்டீர்கள்?
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 07.07.1958 | 18.08.2015 |

* திருமதி.அம்பிகைபாகன் குடும்பம்
* சிவசீலன் சுபா குடும்பம் - லண்டன்
* சத்தியசீலன் பொண்விழி குடும்பம் - லண்டன்
* சிவகுமார் துவாஜினி குடும்பம் - லண்டன்
* சுதர்சன் அமுதினி குடும்பம் - பிரான்ஸ்
* சிவரூபன் பகிரதி குடும்பம் - கனடா

தீபன் அச்சகம் - இல.18, யாழ் வீதி, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி



பிறப்பு

07 07 1958

இறப்பு

18 08 2015

நெடுந்தீவு, கிழக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும் இல.100, யாழ் வீதி, வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட

## அமரர்.அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

ஆறவே ஆறாது எம் நெஞ்சம்
மறைந்தவர் வருவாரோ என்றெண்ணி
மனதார தேற்றுகின்றோம்.
விளக்கினிலே விழுந்திட்ட விட்டில்களாய்
விம்மி விம்மியே அழுகின்றோமையா
தூண்டிலிலே அகப்பட்ட மீன்களென
துடிதுடித்துக் கதறுகின்றோம்
உறவுகள் எத்தனை இருந்தென்ன
உலகிலே தேறுதலாய் ஒருபோதும்
தேறிடாது எம்மனம் தேடினாலும்
காண்போமா உங்கள் சிரித்த முகம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்

குட்டி

மோகன் புத்தகச்சாலை - பளை

தீபன் அச்சகம் - இல.18, யாழ் வீதி, வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கைகள்



**பிறப்பு**

07
07
1958

**இறப்பு**

18
08
2015

நெடுந்தீவு, கிழக்கைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வசிப்பிடமாகவும்
இல.100, யாழ் வீதி, வவுனியாவை வதிவிடமாகக் கொண்ட

## அமரர்.அமரசிங்கம் தர்மகுலசிங்கம்

அணையாத தீபம் ஒன்று அணைந்ததுவே!
பாசத்தின் இருப்பிடமாய் புகழுடன் வாழ்ந்தவரே!
பொன் நிலா புத்தொளியும் புன்னகை முக ஒளியும்
விண்மீது மறைந்ததினால் வேதனையில் அழுகின்றோம்.

சோகத்தில் எமை ஆழ்த்தி விட்டு சுகமாக உறங்குகிறீர்
கண்கான தேசம் தன்னில் உன்மேல் அன்பு காட்டும்
அனைவரையும் அலறவிட்டு எங்கு சென்றீர்கள் ?

அனைவரும் துடிதுடிக்க உறவுகள் உருகி நிற்க
பாதி வழியில் பயணத்தை முடித்து விட்டு
பாரினிலே நீ மறைந்து விட்டீர்கள்
நம் காதில் கேட்ட செய்தி பொய்யாகாதா...?
ஒரு தரம் கண் பார்ப்பீர்களா ?
இனி எங்கு காண்போம் உம் போன்ற பொக்கிசத்தை.

**பிரிவால் துயருறும்**

**பொன்ராசா குடும்பம்**
குருமன்காடு, வவுனியா.

தீபன் அச்சகம் - இல.18. யாழ் வீதி. வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எம் குடும்ப தலைவரும். கிளிநொச்சி மாவட்டத்தில் குலம் அண்ணர் என நன்கு அறியப்பட்ட வருமான அமரர்.அமரசிங்கம் தர்மகுலசிங்கம் அவர்களின் இறுதி நாட்களில் அவர் நோய்வாய் பட்டு வைத்தியசாலையில் இருந்தபோது பராமரிப்பு செய்து உதவிய கிளிநொச்சி பொதுமருத்துவ மனையின் வைத்தியர்கள் வவுனியா பொது மருத்துவ மனையின் வைத்தியர்கள் தாதியர்கள் மற்றும் அவரது இறப்புச் செய்தி கேட்டு ஓடோடிவந்து உதவியவர்கள், உணவளித்தவர்கள் இறுதிக் கிரிகைக்கு நேரடியாக வந்து கலந்து கொண்டவர்கள் தொலைபேசி வாயிலாக உள்நாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் ஆறுதல் கூறியோர் கண்ணீர் அஞ்சலி துண்டு பிரசுரம் வெளியீடு செய்தோர் இரங்கல் உரையாற்றியோர், இறுதிசடங்கு மேற்கொண்ட குருமார்கள், ஓதுவாமூர்த்திகள், பறை முழங்கியோர் மற்றும் வீட்டு கிருத்திய நிகழ்வில் கலந்து கொள்வோர் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

குடும்பத்தினர்.

இல.100, யாழ்வீதி,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச வி

✷ அமரசிங்கம் + தெய்வானைப்பிள்ளை

✷ தர்மகுலசிங்கம்

வரதலட்சுமி
+
நந்தகுமாரன்

செந்தாளன்
செஞ்சோழன்

தர்மானந்தன்
+
கலாதேவி

தாரணி

கேதீஸ்வரன்
+
பத்மராணி

திவாரகா
கிசேரன்
மிதுரிகா

கமலவேனி
+
தர்மகுலசூரியர்

திலக்ஷனா
துவோகன்
சிவனுஜா

கணேச

சரீரதேவி
+
✷ அம்பிகைபாகன்

துவாஜினி
சிவசீலன்
சத்தியசீலன்
அமுதினி
பகீரதி

சரசானந்ததேவி
+
கனகசபாபதி

ரஜனி
சுகந்தினி
நந்தினி
காந்தரூபன்
சுஜாதா

விஜயகுமாரன்
+
✷ ஜெயக்குமாரி

ஸ்ரீ ஜெயதீபன்
ஸ்ரீ பிரதீபன்
ஸ்ரீ சிவதீபன்
ஸ்ரீ ஜெயதீபா

✷ விஸ்ணுகுமா
+
பிறேமாவதி

சுபா
ரூபா

⊕

லதீசன்
தினோசன்
கிருதுஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ச விருட்சம்

னி

ரியர்

னா
ன்
ர

கணேசராசா + ஸ்ரீபாரததேவி

விஸ்ணுகுமாரன் + பிறேமாவதி
→ சுபா, ரூபா

சத்தியானந்ததேவி

சிறிஸ்கந்தகுமாரன் + லக்சுமிதேவி
→ துசிந்தா, றஜிந்தன்

சாந்தினிதேவி + நகுலேஸ்வரன்
→ கஜேந்திரன், ✱ யசீந்திரன், பகீந்திரன், யதுர்சா, லதுர்ஜா

சிவஞானதேவி + பொன்ராசா
→ தர்சிகன், சயந்தன், சதுர்சிகன்

✱ அமரர்களை குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

**'இதுவே உலக நியதியும்**
**எனது படைப்பின் சாராம்சமாகும்'**
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



தீபன் அச்சகம் - இல.18, யாழ் வீதி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org